பருவவெளியீட்டுப் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 பங்குனி 27 றஜப் 28 இதழ் 58
யாழ்ப்பாணம் புதன்கிழமை 9-4-1986

## ● யாழ்ப்பாணம்மீது பெரும் தாக்குதல் நிகழும் அறிகுறி!

### சென்னையில் 'அமிர்' அச்சம்

[சென்னை]

காங்கேசன்துறை, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை முதலான கடலோரப் பட்டினங்களிலிருந்துமக்களை வெளியேறுமாறு இலங்கை ஆயுதப்படையினர் கேட்டிருப்பது, அவர்கள் மிக விரைவில் யாழ்ப்பாணம்மீது ஒரு பெரும் தாக்குதலை நடாத்தவிருப்பதற்கான சமிக்ஞைகளாகவே தெரிகின்றன எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது கூறினார்.

கடலோரப் பிரதேசங்களில் வாழும் மக்களை உள்ளூர்களுக்கு விரட்டியடித்து ஒட்டுமொத்தமாக ஒரு இனப்படுகொலையை நடாத்துவதே அரசின் திட்டமாகும் என திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறினார்.

[5ம் பக்கம் பார்க்க]

## ● வடபகுதி மக்களுக்கு இராணுவம் அறிவிப்பு:

# உரிய பாதைகளைப் பாவிக்கவும்; குறுக்குவழியை நாடாதீர்!

### ஜே. ஆர். சோவியத் செல்கிறார்!

[கொழும்பு]

ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வரும் ஜூலைமாதம்

[5ம் பக்கம் பார்க்க]

### கையில் பொருள்களைத் தவிர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

**"வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களுக்கு அண்மித்துள்ள வீதிகளால் மக்கள் செல்லாமல் குறுக்கு வழிகளைப் பாவிப்பது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. அப்பாதைகளால் மக்கள் பயமின்றிச்செல்லமுடியும. ஆனால் பாரமான பொருள்களையோ. பைகளையோ கொண்டுசெல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்."**

இவ்வாறு வடபகுதி மக்களுக்கு வடபகுதி இராணுவ முகாம்களுக்குப் பொறுப்பான அதிகாரி அறிவித்தல் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இவ்வறிவிப்பு கொழும்பில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் ஆயுதப்படை முகாம்களைச் சுற்றியுள்ள 1000 மீட்டர் வலயத்துள் வாழ்கின்ற மக்களுக்கே இவ்வறிவுப்பு முக்கியமாக விடுக்கப் பட்டுள்ளது. அவ்வறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முகாம்கள் மீது தாக்குதலை தொடுக்கின்றவர்களுக்குப் பாதுகாப்பு வலயத்துள் வசிக்கின்ற மக்கள் உதவிசெய்யக் கூடாது வலயப் பகுதிகளில் இருந்து இராணுவ முகாம்கள்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டால் நாம் திருப்பித் தாக்குதலை நடத்துவோம். இச்சமயம் பொதுமக்கள் தம்மைத் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

எமது முகாம்கள்மீது தாக்குதலை நடத்துபவர்களே எமது எதிரிகளாவர்; பொதுமக்கள் அல்ல.

இதுவரை எமக்குப் பொது மக்கள் ஒத்துழைப்புத் தந்து வருவதைக் காணமுடிகிறது." (ஐ)

### 'செல்வா' தூபிக்கு ஷெல் அடி!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம்கோட்டை இராணுவ முகாமுக்கு அருகாமையில் அமைந்துள்ள தந்தை செல்வநாயகத்தின் ஸ்தூபி நேற்று முன்தினம் ஷெல் தாக்குதலுக்குள்ளானதால் உடைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இத்தூபியின் மேற்பாகத்தின் பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

முன்பும் இத்தூபியில் சிறு உடைவுகள் ஏற்பட்டிருந்தமை குறிபபிடத்தக்கது [ஐ]

### தொண்டமானாறு ராணுவ முகாம்மீது தாக்குதல்: ஒருவர் பலி!

[கொழும்பு]

தொண்டமனாறு பாதுகாப்புப் படை முகாமினைநோக்கி தமிழ்த் தீவிரவாதக்கோஷ்டி நடாத்திய தாக்குதலில் இரு இராணுவசிப்பாய்கள் படுகாயமடைந்தார்களெனவும், காயமடைந்தவர்களில் ஒருவர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படும்போது மரணமடைந்ததாகவும் தேசிய பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

### தொண்டமானாறு முகாம் ஷெல், துப்பாக்கிச்சூட்டுக்கு இரு இளைஞர்கள் பலி!

[புலோலி]

தொண்டமனாறு இராணுவ முகாமுலிருந்துமேற்கொள்ளப்பட்ட மோட்டார் ஷெல், துப்பாக்கிச்சூட்டுச்சம்பவங்களுக்கு இரண்டு இளைஞர்கள் பலியானார்கள்.

நெல்லியடியைச் சேர்ந்த எஸ். சாந்தகுமார், எஸ். ஸ்ரீதரன் ஆகிய இரு இளைஞர்களுமே பலியானவர்களாவர். இவர்களது மரணத்தையடுத்து நெல்லியடிப் பொதுமக்கள் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டிருந்தனர்.

### இலங்கை இனப்பிரச்னை-பண்டாரி

## உண்மையான நிலையை உணரத் தவறினாராம்!

[சென்னை]

இலங்கையின உண்மை நிலையையிட்டு திரு. ரொமேஷ் பண்டாரி உதாசீனமாக இருந்து விட்டாரெனவும், இதனால் அண்டை அயல் நாடுகளைப் பெறுத்தளவில் இந்தியா கடைப்பிடிக்கும் ராஜதந்திரம் படுதோல்வி அடைந்துள்ளதெனவும் 'இந்து' நாளேட்டின் அரசியல் விமர்சகர் கருத்து வெளியிட்டுள்ளார்.

முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரி தமது பதவியிலிருந்து ஒய்வு பெறுவதின் நிமித்தம் எழுதப்பட்ட இச்செய்தி விமர்சனத்தில் மேலும் கூறப்படுவதாவது:

'இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக இந்தியா மேற்கொண்ட மத்தியஸ்தம் படுதோல்வியையே தழுவிக் கொண்டுள்ளது. இலங்கைப் பிரச்னை இந்திய ராஜதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள ஒரு சவாலாகும்.'' [ஷ]

### ராணுவ முகாமில் சிப்பாய் ஒருவர் காயம!

[வவனியா]

செட்டிகுளம் இராணுவ முகாமுக்குள் இடம் பெற்ற

[5ம் பக்கம் பார்க்க]

### மக்கள்வங்கி முகாமையாளர் தகவல்

## புத்தாண்டையடுத்து நகைகள் மீளளிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தமிழ், சிங்கள புதுவருடத்தை அடுததுவரும் வாரங்களில் பலாலி இராணுவ முகாமுக்கருகாமையில் உள்ள கட்டடத்தில் வைத்து அடகு நகைகளை மீளளிப்பதென அரசாங்கம் உறுதியளித்திருப்பதாக மக்கள் வங்கிப்பிராந்திய முகாமையாளர் திரு மு. கணேசசுந்தரம் அறிவிக்கின்றார்,

மக்கள் வங்கித் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டபின் இத்தகவலை தெரிவித்தார்.

அடகு நகைகளை மீளளித்தல் தொடர்பாக அரசாங்கம் எடுத்த முடிவின்படி தமிழ்' சிங்களபுதுவருட தினத்தை அடுத்து வரும்வாரங்களில் ஒவ்வொரு வாரமும் டணம் செலுத்திய வாடிக்கையாளர்களுக்கு ஒருகிளை வீதம் ஒவ்வொரு வாரமும் பலாலி

[5ம் பக்கம் பார்க்க]

### இலங்கை வங்கிக்கிளை முன் இன்று மறியல் இல்லை

[யாழ்ப்பாணம்]

மக்கள்வங்கியின் வடபகுதிக்கிளை அலுவலகங்களில் அடகு வைத்தவர்கள் இலங்கை வங்கியின் வடபகுகிக்கிளை அலுவலகங்கள் முன்னிலையில் இன்று நடாத்தப்படவிருந்த மறியல்போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக அடகு வைத்தோர் சங்கம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

''எமது சங்கத்தினால் யாழ் மாவட்ட இலங்கை வங்கிக் கிளைகள் முன்பாக இன்று நடாத்தப்படவிருந்த மறியல் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. நகைகளை கையளிப்பது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சி

(5ம் பக்கம் பார்க்க)

### வன்னிவிளாங்குளத்தில் அல்வாய்வாசிபலி; பலர் காயம்

[ஒட்டுசுட்டான்]

மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து ரோந்து சென்ற இராணுவத்தினர் வன்னிவிளாங்குளத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் பலியானார். மற்றும் பலர் படுகாயமுற்றனர்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அல்வாயைச் சேர்ந்த எஸ். கஜேந்திரன் 29 வயது) என்பவரே பலியானவராவார்.

துணுக்காய் ப.நோ கூ. சங்க லொறியிலும் மற்றும் சில தனியார் வாகனங்களிலும் ரோந்து சென்ற இராணுவத்தினரே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

### புலிகள் அஞ்சலி

[வல்வெட்டித்துறை]

தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து நேற்றுத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட மோட்டார் ஷெல்' தாக்குதலில் பலியான செ. சாந்தகுமார், கோபு ஆகிய இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தையும், அஞ்சலியையும் தெரிவித்துள்ளனா.

# வரி விளம்பரம்

## தேவை

மிகத் திறமையான முறையில் ஆங்கில மொழி மூலம், சுருக்கெழுத்து தட்டெழுத்து Short hand and Typewriting படிப்பிக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த ஆசிரியை தேவை. விண்ணப்பப் பத்திரத்துடனும், தகைமைச் சான்றிதழ்களுடன் வியாழன் (10-4-86) காலை 9.00 மணிக்கு தொடர்பு கொள்ளவும்: Director, Bitsmans Institutes, Manipay. [C1651]

பிரபல வியாபார நிறுவனத்திற்கு கணக்கியல் அனுபவமுள்ள கணக்காளர் தேவை. ஸ்தாபனங்களில் வேலை செய்த முன் அனுபவமும், ஓடிற் அனுபவமும் இருக்க வேண்டும். 30 வயதிற்கு மேற்பட்ட, ஆங்கில அறிவுள்ளவர்கள் முன் அனுபவத்துடன் விண்ணப்பிக்கவும். சம்பள விபரம் நேரில் கதைத்துக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுதிகதி: 20-4-86. விளம்பர இலக்கம்: A 564. மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [A564]

க. பொ. த. உயர்தரம் சித்தியடைந்த, முன் அனுபவம் உள்ள பெண் தட்டெழுத்தளர்/லிகிதர் - பிரபல வியாபார ஸ்தாபனத்திற்கு தேவை. முன் அனுபவத்துடன் விண்ணப்பிக்கவும். யாழ். நகரிலிருந்து ஐந்து மைல் சுற்றுடலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி. 20-4-86. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: A 563 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (A 563)

யாழ். நகரில் உள்ள பிரபல வியாபார நிறுவனத்திற்கு விற்பனை அனுபவமுள்ள, விற்பனை லிகிதர்-Counter Clerk தேவை. ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும். இதற்கு முன் வேலை செய்த அனுபவத்துடன், வயது 30 - 40க்குக் இடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு திகதி: 19 - 04 - 86. விளம்பர இல: A 562 மே/பா - ஈழநாடு யாழ்ப்பாணம். (A 562)

## தேவை

### வெற்றுச் சாராயப் போத்தல்கள்

மெண்டிஸ் சாராய போத்தல் மூடி போன்ற கட்டை மூடிகள் பூட்டுவதற்கு ஏற்ற வெற்றுச் சாராய வெள்ளை முழுப்போத்தல்களும், அரைப் போத்தல்களும் உடன் தேவைப்படுகின்றன. போத்தல்கள் நியாயமான விலைக்குக் கொள்வனவு செய்யப்படும்.

மாதிரிப் போத்தலுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய
வீடமைப்புச் செயலகம்,
(கச்சேரி முன்பாக)
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.
தொலைபேசி இல: 23831
[A558]

## விற்பனைக்கு

சங்கானை மேற்கு, வடலிய டைப்பில் வீட்டுடன் 5½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. குணராசா, சங்கானை மேற்கு, வடலிய டைப்பு. (C1652)

தெல்லிப்பழை புகையிரத நிலைய வீதியில் 2½ பரப்பு காணியுடன் நல்ல வசதியுள்ள வீடும்வீட்டுத் தளபாடங்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், ஆர். சிவானந்தன் K. K. கணேந்திரன் அன் கொம்பனி (சாட்டட் எக்கவுண்டன்) 68, கன்னாதிட்டி ரோட் யாழ்ப்பாணம். C 1641

நல்ல நிலையிலுள்ள New மொடல் Fisher டெக் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜெ. ஜெகதீசன் 131/4, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் அல்லது வீரமாகாளி அம்மன் அருகிலுள்ள சந்திரன் மோட்டார் கராச். C 1633

## காணவில்லை

ஏழாலை, ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த நாகேந்திரன் என்னும் 10 வயதுப் பையனை 4-4-86 வெள்ளிக்கிழமை காலையிலிருந்து காணவில்லை. உயரம் 4 அடி, கறுப்பு நிறம். சாம்பல் நிறக் கோடு போட்ட கட்டைக் காற் சட்டையும், செம்மஞ்சள் நிறச் சேட்டும் அணிந்திருந்தார். கண்டுபிடித்துத் தருவோருக்குச் சன்மானம் வழங்கப்படும். செல்லத்தம்பி, 106, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (C1659)

சாவகச்சேரி
ப. நோ. கூ. சங்கம்

### வெற்றுச் சாக்கு விற்பனை அறிவித்தல்

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 8000 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு இருக்கிறது. கொள்வனவு செய்யவிரும்புவோர் தமது கேள்விகளை வைப்புப் பணம் ரூபா 300/- ம் கேள்விப் பத்திரப் பணம் ரூபா 10/-ம் செலுத்தி சங்கத்தில் பெறும் படிவத்தில் 17-4-86 வியாழக்கிழமை காலை 10 00 மணிக்கு முன் சங்கத்தில் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் அல்லது சங்கத்திலுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடவேண்டும்.

பொதுமுகாமையாளர்,
சாவகச்சேரி.

7- 4- 86.

(A559)

### தையற்பயிற்சி நிலையம்

[சாவகச்சேரி]

நவ சனசமூக நிலையத்தினர், தமது நிலையத்தில் ஓர் தையற் பயிற்சி நிலையத்தினை மிக விரைவில் ஆரம்பிக்க விருக்கின்றனர்.

இந்த நிலையத்துக்கான தையல் இயந்திரம் ஒன்று தற்போது இருப்பதாகவும், மேலும் இரு இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளையும், நிலையம் செய்து வருகின்றது என தையற் பயிற்சிப் பொறுப்பாளர் திரு. எஸ். தங்கராசா தெரிவித்துள்ளார்

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### இலங்கை மின்சார சபை கிளிநொச்சி பிரதேசம்

### மாங்குளம்

#### மின்மார்க்கத்தில் உள்ள மரங்கள் புதர்களை வெட்டித் தடைகள் அகற்றல்

மாங்குளம் தொடக்கம் கிளிநொச்சிவரை செல்லும் 132 கே வி. மின்மார்க்கத்தில் உள்ள மரங்கள் புதர்களை வெட்டித் தடைகளை அகற்றுவதற்கான கேள்விப்பத்திரங்கள் இலங்கை அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து அல்லது, முன்னர் இலங்கை மின்சார சபைக்கு இத்தகைய வேலைகளை ஆற்றிய அனுபவமுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றன. இது தொடர்பான விண்ணப்பப் படிவங்களை ரூபா 25/-க்குரிய, பொதுமுகாமையாளர், இ. மி. சபை, கொழும்பு என்னும் பெயரில் பெறப்பட்ட காசுக்கட்டளை, அல்லது வங்கியாணையை செலுத்துவதன் மூலம் 86-04-10 பி. ப. 1.00 மணிவரையும் இ. மி சபை, மாங்குளம் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். நிரப்பப்பட்ட விண்ணப்ப படிவங்கள் 86-04-17 அன்று மு.ப. 11.00 மணிக்குப் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அவை அன்றைய தினமே திறக்கப்படும்,

மின்பொறியியலாளர்;
கிளிநொச்சிப் பிரதேசம்,
(A561) மாங்குளம்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



பரமசாமி
கருணானந்தன்
(தொழில் நுட்பவியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், பன்குளம்.)

பிறப்பு: 29-01-1949

இறப்பு: 10-03-1986

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு அகால மரணமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய வைபவம் 9-04-86ம் திகதி அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் சமூகந்தந்து அவரது ஆத்மாசாந்திக்காகப் பிரார்த்தித்து, மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறும் உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.
857, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(C 1586)

## முதலாம் வருட நினைவஞ்சலி



சோமசுந்தரம்
உதயகுமார்

அன்னைமடியில்:
07-06-1967

இறைவனடியில்:
09-04-1985

வருடங்கள் சென்றாலும் என்றும் எங்கள் மனதை விட்டகலா அன்புச்செல்வமே நீர் எம்மை விட்டு பிரிந்து ஓர் ஆண்டு ஆகியும் உமது அழகு வதனமும் அரும் பண்புகளும் எமது உள்ளத்தில் இரவு பகல் நிழலாடுகிறது அன்பே! உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
தந்தை, தாய்,
சகோதரர்கள்.

அம்மன் கோவில்,
கோண்டாவில். C 1660

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அருணாசலம்
செல்லத்துரை
(நியூ ராஜா கபே உரிமையாளர், அளவெட்டி)

தோற்றம்: 18-05-1916

மறைவு: 10-03-1986

எங்கள் குடும்பத் தலைவனாய் வழிகாட்டியாய், ஒளிவிளக்காய், அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மை வாழ வைத்த தெய்வமே. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
நியூ ராஜா கபே,
அளவெட்டி தெற்கு.
(C 1618)

## தேவை

### தமிழ் அச்சுகோர்ப்பாளர்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள எமது அச்சகத்திற்கு துரிதமாகவும், தெளிவாகவும் அச்சுக் கோர்க்கக்கூடிய

**கொம்பசிட்டர்கள் தேவை.**

பக்கமமைத்தல். அழகாக கொம்போஸிங் செய்தல், (DISPLAY) ஆகியவற்றில் அனுபவமுள்ளவர்களும் தேவை.

விண்ணப்பதாரர் அடிப்படைக் கல்வி அறிவுடன் ஆகக்குறைந்தது 10 வருட அனுபவமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

செய்திப் பத்திரிகை வேலைகளில் அனுபவமுள்ளவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

ஏற்கனவே விண்ணப்பிக்காதவர்கள் முழு விபரங்களுடன்

**12-4-86**க்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்:

முகாமையாளர்,

**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
82/2, ஸ்டேஷன் ரோட், யாழ்ப்பாணம்.
(C 1648)

## தேவை

### ஹைடில்பேர்க் ஆட்டோமட்டிக் சிலிண்டர் பிரின்டிங் மெஷின் ஒப்பரேட்டர்

யாழ்ப்பாணத்திலுள்ள எமது பத்திரிகை அச்சகத்திற்கு ஹைடில் பேர்க் ஆட்டோமட்டிக் சிலிண்டர் பிரின்டிங் மெஷின்கள் சுயமாக இயக்குவதில் ஆகக்குறைந்தது

**10 வருட அனுபவ முள்ளவர்கள் தேவை.**

ஹைடில்பேர்க் மெஷின் பற்றி நல்ல தேர்ச்சியுள்ளவர்கள் விரும்பப்படுவர்.

ஏற்கனவே விண்ணப்பிக்காதவர்கள் முழு விபரங்களுடன்

**12-4-86**க்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்:

முகாமையாளர்,

**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
82/2, ஸ்டேஷன் வீதி, யாழ்ப்பாணம்.
(C 1647)

## உலகச் செய்திகள்

### அமெரிக்கா அணுசக்தி பரிசோதனை 'நெவாடா' பாலைவனத்தினுள்

# 7 'கிறீன்பீஸ்' காரர்கள்!

வாஷிங்டன், ஏப்ரல் 8

**அமெரிக்காவின் அணுசக்திப் பரிசோதனை ஒன்றைத் தடுக்கும்விதத்தில் சர்வதேச சுற்றுடல் பாதுகாப்பு இயக்கமான 'கிறீன்பீஸ்' அமைப்பின் அங்கத்தவர்கள் சிலர் 'நெவாடா'ப் பாலைவனத்தினுள் நுழைந்துள்ளனர். இவர்கள் பரிசோதனை டத்தப்படவிருக்கும் பகுதிக்கு சென்றுகொண்டிருப்பதாகவும் தமது, பாதுகாப்பை புறக்கணித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்க 'கிறீன்பீஸ்' இயக்கத்தின் ஏழு அங்கத்தவர்களே நெவாடாவினுள் நுழைந்துள்ளனர். இப் பாலைவனத்தில் நிலத்தடி அணு சக்திப் பரிசோதனைஒன்றை இன்று (8-4-86) அமெரிக்கா நடத்தவுள்ளது.

அமெரிக்க'நெவாடா'வின்பரிசோதனை நடத்தப்படும்பகுதி எவரும் பு முடியாதவாறு அமைக்கப்பட்டுள்ளது. வெகு தொலைவிலிருந்த்த பரிசோதனைக்குரிய அணுசக்திப்பொருள் வெடிக்கவைக்கப்படும். கதிரியக்கத்தின் தாக்கத்திலிருந்து ஒதுங்கிக்கொள்ளும் விதத்திலேயே இந்த ஏறபாடுசெய்யப்பட்டுள்ளது

ஆயினும் 'கிறீன்பீஸ்'காரர்கள் கடந்த வியாழக்கிழமை எவருக்கும் தெரியாமல் இந்த நெவாடா பாலைவனத்தினுள் நுழைந்துள்ளனர். அவர்கள் இப் பாலைவனத்தினுள் தாம் தங்கியிருக்கவேண்டிய நாட்களுக்குத் தேவைப்படும் உணவு மற்றும் குடிவகைகளையும் எடுத்துச்சென்றுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பரிசோதனைக்குப்பொறுப்பானவர்கள் இது குறித்து கருத்துவெளியிடுகையில் பரிசோதனைப் பகுதியை அந்த கிறீன்பீஸ்காரர்கள் எந்தவிதத்திலும் அடையமுடியாதென்றும், அத்தகைய முயற்சியை தாம் தடுக்கப்போவதாகவும், அணுசக்திப் பரிசோதனை நிறுத்தப்படமாட்டாதென்றும் கூறியுள்ளனர். [கி]

### 'ராடர்'களுக்குத் தப்பி
## ஏவுகணைகளைத் தவிர்க்கும் புதிய உலோகம்!

லண்டன், ஏப்ரல் 8

ராடர்களின் அவதானிப்பிலிருந்து தப்பி ஏவுகணைத் தாக்குதல்களைத் தவிர்த்துக் கொள்ளும் புதிய பிளாஸ்டிக் ரக உலோகமொன்றை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இந்த உலோகம் பாதுகாப்பான கடற்படைக் கப்பல்களையும் போர் விமானங்களையும் எதிர்காலத்தில் உருவாக்குவதற்குப் பெரிதும் துணைபுரியும் என்று கூறப்பட்டுள்ளது.

'அட்ராம்' (Adram) என்ற இப் புதிய பிளாஸ்டிக் கலப்புடைய கறுப்புநிற உலோகம் ஒருவித கதிரியக்கமுறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த உலோகத் தகடுகள் விமான, கப்பல் உறுப்புக்களாகப் பொருத்தப்படும்பட்சத்தில் ராடர்'களிலிருந்து அவ்விமானங்களும் கப்பல்களும் தப்பிக்கொள்ளமுடியும்.

ராடர்களின் கதிர்களை இந்த லோகங்கள் சிதறச்செய்யும். இதன்மூலம் விமானங்களையும் கப்பல்களையும் ராடர்களால் கண்டுெ ாள்ளமுடியாது.

இதனைத்தொடர்ந்து ஏவுகணைத் தாக்குதல்களிலிருந்து அவை விலகிக்கொள்ளமுடியும் என்று கூறப்பட்டது கி)

### மீண்டும் பஸ் சேவை

[யாழ்ப்பாணம்]

சிலகாலமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த கச்சேரியூடாக யாழ்ப்பாணம் செல்லும் அச்சுவேலி மினி பஸ் சேவை நேற்றுமுன்தினம் தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

### பஞ்சாபில் 250 பேர்கைது
## மாநில விவகாரத்தில் தலையிட வேண்டாம்!
### ராஜீவிடம் பிர்னுலா வேண்டுகோள்!!

சண்டிகார் ஏப்ரல் 8

பஞ்சாப் மாநிலத்தில் கடந்த சில நாட்களில் 250 பேர் கைதாகியுள்ளனர்

இவர்கள் அனைவரும் பாபா ஜே கிந்தர்சிங்தலைமையிலான சீக்கிய தீவிரவாதிகள் என்று

[7ம் பக்கம் பார்க்க]

## தமிழக அமைச்சர் ராஜினுமா!

சென்னை, ஏப் 8

தமிழ்நாடு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே, ஏ. கிருஷ்ணசாமி சட்டசபை அமைச்சரவையிலிருந்து ராஜினுமாச் செய்துள்ளார்.

இவர் தனது ராஜினுமாக் கடிதத்தைத் தமிழக ஆளுநர் திரு, குரானுவிடம் கையளித்துள்ளார். இந்த ராஜினுமாத் தொடர்பாக முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரனின் ஆலோசனைப்படி தாம் முடிவு எடுப்பதாகத் திரு. குரானு அறிவித்துள்ளார்.

திரு கிருஷ்ணசாமி தமிழக அமைச்சரவையிலிருந்தே தாம் விலகிக் கொள்வதாகக் குறிப்

(7ம் பக்கம் பார்க்க)

## புதன் மஞ்சரி

# பிராணிகளில் சகுனங்கள்!

நாய் ஊளையிடுவது, காக்கை கரைவது, சேவல் கூவுவது போன்ற பிராணிகளின் சில செயல்களைக் கொண்டு நம்மவர்களில் பலர் சகுனங்கள், மற்றும் தமது நடவடிக்கைகளை நிர்ணயித்துக்கொள்வதுண்டு.

இத்தகைய செயற்பாட்டை ஒரு மூடநம்பிக்கை என்று ஏளனஞ்செய்வாரும் உண்டு ஆனல் 1976ம் ஆண்டு இத்தாலியில் நிகழ்ந்த பெரும் எரிமலை வெடிப்பொன்று கால நேர, நிலைமைகளை ஊகித்து உணர்வதில் பிரயாணிகள் எத்துணை விசேட சக்திபெற்றவை என்பதை எடுத்துக்காட்டியது

இத்தாலியின் 'ஃப்ரியுலி' என்ற இடத்திலேயே 1976ல் எரிமலை வெடித்தது. இச்சம்பவம் இடம்பெறுவதற்கு சில மணி நேரம் முன்பதாக ஒருமாலை நேரம் இப்பகுதியிலிருந்த மிருகங்கள், பறவைகள் யாவும் அமைதியிழந்திருந்தனவாம்.

வெடிகொண்டவை போலவும் அவை நடந்துகொள்ள ஆரம்பித்தன. நாய்கள் இடைவிடாது குரைத்து ஊளையிட்டன. பூனைகள் குறுக்கும் நெடுக்குமாக ஓடின. கோழிகள் கூடுகளுக்குள் செல்லமறுத்து பறந்தடித்துத்திரிந்தன. எலிகள் பொந்துகளிலிருந்து வெளியே வந்து ஓடித்திரிந்தன. குதிரைகள், பசுக்கள்கூட படபடப்புடன் பெறுமையிழந்தன. ஆனல் மனிதர்கள் இவற்றின் இந்த வித்தியாசமான போக்கை மட்டும் நோக்கினரே தவிர எரிமலை வெடிப்பின் அறிகுறிகளை முன்கூட்டியே உணரவில்லை.

ஆராய்ச்சிக்கு வித்திட்ட இந்த மிருகங்கள் பறவைகளின் போக்கு பூமியதிர்ச்சிக்கு முன நிலத்திலும், காற்றிலும் ஏற்படும் மின்னூட்டமிகுதியை உணர்ந்தே பிராணிகள் அப்படி நடந்துகொண்டன என்பதை விளக்கிது.

எனவே இந்த ஆராய்ச்சி முடிவானது நமது முன்னோர்கள் மிருகங்கள். பறவைகளின் நடவடிக்கைகளைக் கொண்டு வகுத்த சகுனங்கள், ஆதாரபூர்வமானவை என்பதை இத்தாலிய எரிமலைவெடிப்பு மூலம் நிரூபிககிறது. [ப]

★ ★ ★ ★ ★

## 'வெள்ளைப் புலி'கள்!

புலிகள் இனத்தில் 'வெள்ளைப் புலிசள்' என்ற ஒரு ரகமும் உண்டு இந்த ரகம் இந்தியாவிலேயே காணப்படுகின்றது.

இந்தியாவில் அதிகளவில் இந்த புலிகள் ஆரம்பகாலங்களில் இருந்திருக்க வேண்டும். ஆனல் இன்றுஇவை மிகவும்அருகிப் போயுள்ளன.

காடுகளில் இந்த புலிகள் இனம் முற்றிலும் அழிந்துவிட்டதாம். தற்போது இந்தியாவில் இந்த புலிகளில் 24 மட்டுமே இருக்கின்றன. இவை கூட இந்தியாவில் உள்ள பல்வேறு மிருகக் காட்சிசாலைகளில் ஆங்காங்கே காணப்படுகின்றன

எனவே இந்த 24 வெள்ளைப் புலிகளையும் மிகக் கவனமாகப் பாதுகாத்து அவற்றின் இனப் பெருக்கத்தை ஊக்குவிக்கும்படி இந்திய அரசு இந்த மிருகம் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளது. [கி]

## சுண்ணும்புச் சத்து

★ மனித உடலில் கல்சியம்' உயிர்ச் சத்து [சுண்ணும்புச் சத்து] இருப்பது தெரியும். சாதாரணமாக ஒரு மனிதனின் உடலில் ஒரு சிறு சுவருக்கு வெள்ளையடிப்பதற்குத் தேவையான அளவு சுண்ணும்பு இருக்கிறது.

## ★ சவூதி எப்படி இருக்கிறது? அங்கு என்ன நடக்கிறது? ★

● சவூதி அரேபியாவில் வாரி உழைத்து வாழ்க்கையை வளமாக்கலாம் என்ற காலம் மலைஏறிவிட்டது. இங்கு மூலைக்குமூலை ஒப்பந்தவேலைகள் தோன்றி வருகின்றன. தனியார் கம்பனிகளின் பெருக்கத்தினுல் குறைந்த தொகைப்பணத்துக்கே ஒப்பந்த வேலைகளை ஏற்கவேண்டிய சூழ்நிலை தனியார் கம்பனிகளுக்கு உருவாகியுள்ளது இதனுல் தொழிலாளர்களின் சம்பளம் குறைக்கப்பட்டு வருகிறது. வெளிநாடுகளிலிருந்தும் குறைந்த சம்பளத்துடன் வேலைசெய்வதற்குஆட்கள்வரத் தயாராக இருக்கிறார்கள். இந்நிலையில் நம்மவர்கள் கடந்த காலங்களைப் போல 'வாரி அள்ளு'வதை இனிமேலும் எண்ணிப் பார்க்கமுடியாது.

● சவூதி அரசு இங்கு பணியாற்றும் வெளிநாட்டவர் தொகையைத் திட்டமிட்டுக் குறைத்துவருகிறது ஆனல் சுத்திகரிப்புத் தொழிலைப் பொறுத்தவரையில் அது இப்போதைக்கு சாத்தியமா? என்பது கேள்விக்குறி. சுத்திகரிப்புத்தொழில் இல்லையேல் சவூதியில் துர்நாற்றம் பொறுக்கமுடியாது. அவ்வளவு தூரத்துக்கு சுத்திகரிப்பு வேலை இங்கு அவசியமானதாகவே இருக்கிறது.

● கல்வித் தராதரம் இன்றி சாரதி வேலை அனுபவம் மாத்திரம் இருந்தால் இங்கு உயர்பதவி வகிக்க முடியும். இந்த அனுபவம் மூலம் போர்மனுகப் பதவி வகிக்கக்கூடிய வாய்ப்பு சவூதி அரேபியாவில்உண்டு சாரதி வேலைக்காக இங்குள்ள சில கம்பனிகளுக்கு வந்த நம்மவர்கள் அங்கே போர்மனுகப் பணியாற்றுகிறார்கள். இவர்களுக்குக் கல்வித் தராதரம் எதுவுமே இல்லை.

● அராபியர்கள் விரும்பிப் பருகுவது தேநீராகும் விருந்துகள், வைபவங்களில் தேநீர் முதலிடம் பெறுகிறது. பாடசாலைகள் கல்லூரிசள், தொழில் நுட்பக் கல்லூரிகள்' சர்வகலாசாலைகள், பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள் . அரசாங்க அலுவலகங்கள்' திணைக்களங்களில் தேநீரைத் தயாரிக்கவென்றே அராபியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். தேநீர் தயாரிப்புக்கு ஓர் அராபியருக்கு மாதாந்த சம்பளமாக ஆகக் குறைந்தது இலங்கைப் பணப்பெறுமதிக்கு 15 ஆயிரம் ரூபாவற்கு மேல்கிடைக்கிறது.

தகவல்:
எம். சுபேந்திரன்

★ ★ ★

## 25க்கு முன்

★ பெண்கள் 25 வயதுக்கு முன் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். குறைகள் இல்லாத குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள அது தகுந்த வயது வரம்பு என்கிறது கேரளா திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரி.

## மணி வாக்கு

சால்பிற்கு கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். — குறள்.

[தன்னைவிடத் தாழ்ந்தவர்களிடம் சிலசமயம் தோல்விகண்டால் அதைப் பெருந்தன்மையுடன் ஒப்புகொளல் சால்பென்னும் பொன்னுக்கு உரைகல்,

# நமதுநோக்கு

## மன்னர்களிடமிருந்து மக்கள் காக்கப்படுவர்

“ஆண்டவனுடைய ஆட்சியையும் அறத்தையும் நாடுங்கள்; மற்றவை தாமாக வந்துசேரும்” என்பது கிறிஸ்துவின் மணிமொழி

இன்று உலகில் எந்த நாட்டிலாவது இந்த உண்மைக்கு இடமிருக்கிறதா.

ஆண்டவன் ஆட்சி மண்ணுலக மன்னனின் ஆட்சிக்கு முரண்பட்டிருக்கும் என்பதை யேசுநாதர் நன்கறிந்திருந்தார்; அத்தகைய கொடிய ஆட்சியை சரித்துவிடும் மரபை மக்கள் மத்தியில் உருவாக்கிய பெருமானும் அவரே.

குறிக்கோளைக் கைக்கொண்டு லட்சியப்பாதையில் சென்று உயிரையும் விடத்துணிந்தவரை எவர் தடுத்துத் துன்பத்தைக் கொடுத்து வென்றுவிட முடியும்?

உலக வரலாறு “இல்லை” என்ற விடை அளிக்கிறது; ஆனால் லட்சியப்பாதை சரியான பாதையாகவிருக்க வேண்டுமென்பதை மறந்துவிடலாகாது; முன்னுக்குச் சென்று மூக்கறுபடுபவனைப் பார்த்து பின்னடிக்கும் மக்கள் இந்த உண்மைக்கு எதிரான உதாரணம் என்பதையும் கருத்திற்கொள்ளவேண்டும்.

பேரரசுகளும் ஏகாதிபத்தியங்களும் மடிந்தபோதும், அவை வேறு வடிவத்தில் உருவாகுவதை இன்றைய உலகு எடுத்துக்காட்டுகின்றது.

ரோமன் பேராட்சி, பிரித்தானிய பேரரசு மறைந்துவிட்டன. இத்தகைய ஏகாதிபத்தியங்களின் பிடியிலிருந்து விடுதலை பெற்ற நாடுகள் இன்று சுதந்திரமாக வாழ்கின்றனவா? விடைவிசித்திரமாக இருக்கும்.

“வியாபார முதலாளிகளான ஆங்கிலேயரின் திமிரை அடக்கினால் ஆரிய பேரினமாகிய ஜெர்மனியின் பெருமையை உலகறியும்.”

இந்தக் கர்ச்சனையுடன் இரண்டாவது உலக யுத்தந் தொடங்கிய ஹிட்லர் யூதரை வதைத்து, கம்யுனிசத்தைத் தாக்கி, ஜனநாயக அமைப்புக்கு மண்போட எத்தனித்தான். ஈற்றில் மண்கவ்வினான்.

அவனுடைய பாசிச கொள்கையை எதிர்த்த பிரிட்டனுக்கு உதவிசெய்த அமெரிக்கா, பிரிட்டனின் ஆட்சியில் அடிமை நாடாக இருந்தது.

இன்று பிரிட்டனின் ஏகாதிபத்தியம் சரிந்துவிட்டது. அந்த இடத்தை அமெரிக்கா எடுத்திருக்கிறது.

எனவே மக்களை ஒடுக்கிவந்த மன்னர்— ஆட்சித்தலைவர்கள், ஆண்டவன் கருணையால்— மக்களின் கண்ணீரால் இருந்த இடம் தெரியாது அழிந்துவிடுகின்றன.

வரலாற்றின் உண்மை இதுவானாலும் செம்பில் களிம்பு ஏறிக்கொண்டிருப்பதுபோல, மக்களாட்சி ஜனநாயகம் என்ற பெரும் கோட்பாடுகள் கோணல் வழிகளில் திருப்பப்பட்டு பண்டைக்கால மன்னரைப்போல ஆளப்படுவோரை அடக்குமுறைகளுக்கு பலியாக்க உதவுகின்றன.

தென் ஆபிரிக்கவிடுதலைப் போர் இன்று இந்தக் கொடிய நிலைக்கு மிகப் பொருத்தமான உதாரணம். நீண்டகாலம் அடிமைத்தனத்தில் நித்திரை கொண்ட கறுப்பர் இன்று விழித்தெழுந்து தமது சுதந்திரத்துக்குப் போராடுகின்றனர்.

எங்கள் நாட்டு மக்கள் தலைவர்கள் போல நீண்டகாலம் கதை பண்ணிக் கொண்டிருந்த கறுப்பர்களுக்கு பெரும் பெண் தலைவர் வின்னிமன்டெலா “வாயை மூடி இன ஒதுக்கலுக்கெதிரான போரைத் துரிதப்படுத்துங்கள்” என்று அறைகூவல் விடுத்திருக்கிறார்.

எங்கு பார்த்தாலும் போரும் பிணக்கும்; ஆனால் எந்தப்பக்கத்தில் நியாயம் உண்டுஎன்பதைத் தெளிந்து கொண்டால் அது மக்கள் பக்கம் என்பதும்; அப்பக்கம் கொடுங்கோலாட்சிக்கு எதிரானதென்பதும்வெளிப்படை.

அமெரிக்க ஜனாதிபதி மக்கள் அபிப்பிராயத்துக்கெதிராக நிக்கரகுவா, என்ற சிறிய வறிய நாட்டைத் தாக்கத்தயாராகிறார்.

பிலிப்பைஸ்ஸில் என்ன நடந்தென்பதைஎவரும் இலகுவில் மறந்திடமுடியாது.

மத்திய கிழக்கை என்றும் போர்க்களமாக வைத்திருக்க முயலும் இஸ்ரேல், தனது எஜமானின் (அமெரிக்கா) குரல்.

இஸ்ரேலைப்போல, ஆசிய பிராந்தியத்தில் ரஷ்யாவுக்குத்தடை போட பாகிஸ்தான்ஒருவேட்டை நாயாக வளர்க்கப்படுகிறது. ஆப்கான் பிரச்னைக்கு ஆப்பிட்டும்.இந்தியாவைநிலைகுலைத்தும், இலங்கைஅரசின் இனவாதத்துக்கு ராணுவ உதவி செய்தும் பாகிஸ்தான் இன்று அவப்பெயர் தேடிக்கொண்டது.

அங்கும் மக்கள், ராணுவ ஆட்சியிருந்து விடுதலைக்குப் போராடுகின்றனர். கொலை செய்யப்பட்ட ஜனாதிபதி பூட்டோவின் மகள் அந்த மக்களின் கண்ணகியாகி நீதி கோருகிறாள்.

இந்தப்பரந்த போக்கில் எங்கள் நாட்டில் தமிழ் மக்கள் படும் துயரம், பொது மக்கள் புத்தாண்டைக் கொண்டாட முடியாத கொடுமைநிலை தீர மக்கள் குரல் மகேஸ்வரன் குரலாக மாறவேண்டும்.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடும் “1985-ல்இலங்கையில் தமிழ்”

உலகளாவிய நிலையில், தமிழர்பண்பாட்டினை, மொழி இலக்கிய அடிப்படையில், பேணும் பணியினை மேற்கொண்டு வருவதற்கென அமைக்கப்பட்டதே ,‘உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்” ஆகும் சென்னையில் அமைந்துள்ள இந்நிறுவனம் உலகில் எங்கெங்கு தமிழினம் வாழ்கின்றதோ அவர்களது இலக்கிய வளங்களைத் தேடிச் சேகரித்துப் பேணுவதில் முன்னின்று உழைத்துவருகின்றது. பழைய ஏட்டுச் சுவடிகளை வெளியிடுதல், ஆராய்ச்சிக் கருத்தரங்குகளை நடாத்துதல், ஆராய்ச்சியாளர்களுக்கு ஊக்கமளித்தல் முதலாம் பல்வேறு பணிகளில் இந்நிறுவனம் தம் பணியினை விரிவுபடுத்தியுள்ளது.

1980ஆம் ஆண்டிலிருந்து தமிழர் தம் கலைஇலக்கியப் பணிகளைப் பதிவுசெய்து, அவற்றை மதிப்பிட்டு ஒவ்வோராண்டும் தனித்தனி வெளியீடுகளாக வெளியிட்டு வருகின்றனர். அவ்வகையில் “1980இல் தமிழ், 1981இல் தமிழ்” என்னும் இரு பெரு நூல்கள் வெளிவந்துள்ளன 1982, 1983, 1984ஆம் ஆண்டுகளுக்கான தனித்தனியான வெளியீடுகள் தற்போது அச்சாகிக் கொண்டிருக்கின்றன. இத்தொகுதிகளிலே ஈழத்து எழுத்தாளர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரது பங்களிப்புக்களும் இடம்பெற்றுள்ளன.

இதுபோன்றே “1985இல் தமிழ்” என்ற தொகுப்பினை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் விரைவில் வெளியிடவுள்ளது. இதில் “1985இல் இலங்கையில் தமிழ்” என்ற கட்டுரையை யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் கலாநிதி இ பாலசுந்தரம் எழுதிக்கொண்டிருக்கிறார்.

ஈழத்து எழுத்தாளர் ஒவ்வொருவரும் 1985இல் மேற்கொண்ட கலை இலக்கியப் பணிகள் பற்றிய முழுவிபரங்களையும் கட்டுரையாளர் தற்போது சேகரித்துக்கொண்டிருக்கின்றார். நம்நாட்டறிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் முதலியோரது பணிகள் யாவும் இக்கட்டுரையிலே தவறாது இடம்பெறுதல் அவசியமாகும். இக்கட்டுரை ‘1985இல் தமிழ்’ என்ற பெரு நூலிலே இடம் பெறவுள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தவேண்டியது நம்நாட்டு கலை, இலக்கிய ஈடுபாட்டாளர் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். இத்தகையோர் 1985ஆம் ஆண்டில் மேற்கொண்ட கலை, இலக்கியப் பணிகள் பற்றிய தமது விபரத்திரட்டினை உடனடியாகக் கீழ்க்குறிப்பிடும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

இக்காலகட்டத்தில் இத்தகு பணிகள் அவசியம் என்பதும், ஆக்கங்கள், பணிகள் பதிவு செய்யப்படவேண்டியது அவசியம் என்பதும் தெரிந்ததே.

தகவல் அனுப்பவேண்டிய முகவரி: கலாநிதி இ. பாலசுந்தரம், தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

## மகாஞான குரவர் செல்லப்பா சுவாமிகள்

தோற்றத்தில் ஆண்டியாய் ஆளுமையில் அரசர்க்கு மேம்பட்ட அரசராய் விளங்கிய ஞானியர்களுள் அதிசிறப்பு வாய்ந்தவர் நல்லூர்ச் செல்லப்பா சுவாமிகள்.

இவரே சிவயோக சுவாமிகளை ஆட்கொண்ட மகாஞான குரு. யோக சுவாமிகளின் பாடற்றொகுப்பு நற்சிந்தனை. அதிலே சிவபரத்துவம் பேசப்படுகின்றது. சிவமும் குருவும் வேறல்லவென்று செப்பப்படுகின்றது. நல்லூரான்பெருமை நாட்டப்படுகின்றது.

“என்னை எனக்கு அறிவித்தான். இணையடி என் தலை வைத்தான். அன்னை பிதாகுருவானான். அவனியெல்லாம் ஆளவைத்தான். முன்னைவினை நீக்கிவிட்டான். மூவருக்கும் அறியவொண்ணான். நன்மை தீமை அறியாதான். நான் தானாய் விளங்குகின்றான்-எங்கள் குருநாதன்” எனப் பரவுகின்றார் யோகசுவாமிகள்.

நல்லூரில் ஆட்டக்காரன், அருவமும் உருவமுமானான், குருமணி, ஆசான், கூசான், பேசான், ஊக்கம் உள்ளவர் ஏக்கம் உற்றிடார், ஆசான் அருளால் ஆசான் ஆயினேன். தன்மை முன்னிலை படர்க்கை அற்றவன், நாம் எங்கே நாதன் எங்கே, ஆர் அறிவார் என்று அப்பன் சொல்வான், சொல்லச் சொல்லச் சுவைக்குமே செல்லப்பன் திருநாமம். இவை போன்ற தலைப்புக்களிலே திருப்பாடல்களை யோகசுவாமிகள்அருளிச் செல்லப்பா சுவாமிகளே நமக்கும்

[7ம் பக்கம் பார்க்க]

## “தியானமும் பஜனையும் மனிதனைப் பூரணப்படுத்தும்”

[யாழ்ப்பாணம]

“தமிழ் மக்கள் படும் வேதனைகளுக்கும், துன்பங்களுக்கும் காரணம் அவர்கள் ஆத்மீகத்தைப் புறக்கணித்ததே. எமது வாழ்வு மலருவதற்கு ஒரேவழி ஆத்மீகம் ஒன்றுதான்” என்று சுவாமி சித்ருபானந்தா, சுவாமி சாந்தானந்தாவின் 52-வது பிறந்த தின விழா அண்மையில் இராமகிருஷ்ணலயத்தில் கொண்டாடப் பட்டபோது கூறினார்.

மேலும் அவர் தமதுரையில்; “பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை அடையத் தியானம், சத்சங்கம், பஜனை, சங்கீதம் என்பன இன்றியமையாதன. அவை மனத்தின் அழுக்குகளைப் போக்கி, மனிதனைமுழு மனிதனாக மாற்றும் தன்மையன. மேலும் யோகர் சுவாமிகள் கூறியதுபோல் “ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ முடிந்த காரியம், முற்றும் உண்மை, நாம் அறியோம்’ என்ற வாக்கியங்கள் மிகவும் அர்த்தம் நிறைந்த வாக்கியங்கள். அவர் தீர்க்க தரிசனத்தின்மூலம் கண்டு சொன்ன உண்மைகளே இன்று நடக்கின்றன” என்றார்.

ராமகிருஷ்ணலய மாணவிகளின் பஜனையும், பூசையும் அதைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெற்றன. மற்றும் அனைவரையும் எதிர்வரும் 16-ம் திகதி நிகழவுள்ள அந்தர் யோகப் பயிற்சிகளில் கலந்து பயனடையும்படி ராமகிருஷ்ணலய அமைப்பாளர் இரா. மகேந்திரசிங்கம் கேட்டுக்கொண்டார்.

## “ஆலயங்களை ஒட்டி அறப்பணி மலரவேண்டும்”

(புங்குடுதீவு)

“மக்களின் தேவைகளை ஆலயங்கள் நிறைவேற்ற வேண்டுமென்பதற் கொப்பவே, நீர்த்தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, ஆலயங்கள் தோறும் திருக்குளங்களை நம் முன்னோர்கள் தோற்றுவித்தார்கள்.”

புங்குடுதீவு பாணவிடை சிவன் கோயில் அம்மன் திருக்குளத்திருப்பணி வேலைகளை ஆரம்பிக்கும் வைபவத்திற்கு தலைமைதாங்கிப் பேசுகையில் கோயில்பரிபாலன தர்மகத்தா சபைத் தலைவரான சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

தொழிலதிபர் கா. சோமசுந்தரத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்வைபவத்தில் எஸ். கே. மகேந்திரன் மேலும் பேசுகையில்;“ஆலயங்களை ஒட்டி அறப்பணிகளும், கல்விப்பணிகளும், மருத்துவப்பணிகளும, அனாதைகளை ஆதரிக்கும் பணிகளும் மலரவேண்டும். அப்பூதி அடிகள் போன்றவர்களும், இராசராசசோழமன்னனின் தமக்கையாரான குந்தவைப் பிராட்டியாரும் இத்தகைய முறையில் பணிகளாற்றி மக்கள் துயர்த் தீர்தார்கள் கால்நடைகளும், மக்களும் குடிநீருக்கே கஷ்டமுறும் புங்குடுதீவுக் கிராமத்தில் அமையும் இத்திருக்குளம் மக்களின் தேவைவையும் பூர்த்தி செய்யும் என்பதில் ஐயமில்லை. இத்திருப்பணிறை நிறைவேற்ற முன்வந்திருக்கும் அனைரும் என்றும் பாராட்டுதலுக்குரியவர்களே” என்றார்.

திருவாளர்கள் ந. இராசதுரை ஆசிரியர், ம. பாலசிங்கம், ஈ. எஸ். உதயகுமார் ஆகியோர் உரையாற்றிய இவ்வைபவத்தில் சபைச்செயலாளர் கா. கந்தசாமி நன்றியுரை நிகழ்த்தினார்.

சுமார் நாற்பதினாயிரம் ரூபா செலவில் அமையவிருக்கும் இத்திருக்குள கட்டிடவேலைகளை யாழ்ப்பாணம் கட்டிடக் கலைஞர் எஸ். யோகராசா குழுவினர் துரிதமாக செய்து வருகின்றனர்.

## கொடியேற்றம்

[மாவிட்டபுரம்]

பழமை வாய்ந்த மாவிட்டபுரம் வீனியவரை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி தேவஸ்த் தானத்தில் முதல் தடவையாககொடியேற்றவிழா எதிர்வரும் 15ம் திகதி நடைபெறவிருக்கிறது.

மேற்படி ஆலயம் புனரமைக்கப்பட்டு கடந்த 9 வருடங்களாக அலங்கார உற்சவம் நடைபெற்று பத்தாவது வருடமாக இம்முறை கொடியேற்ற உற்சவம் நடைபெறுகிறது.

வேட்டைத் திருவிழா 21 ம் திகதியும், சப்பரத்திருவிழா 22ம் திகதியும், ரதோற்சவம் 23ம் திகதியும், தீர்த்தோற்சவம், 24ம் திகதியும், நடைபெறவிருக்கின்றது.

ஆலய நிர்வாகஸ்த்தர் பிரமஸ்ரீ அ. துரைச்சாமி ஐயர் ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

## வருடாந்த உற்சவம்

(மாவிட்டபுரம்)

பிரசித்திபெற்ற மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 13ம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

தற்போதைய நாட்டின் சூழ்நிலைக்கேற்ப பகல்நேர திருவிழாவை 12 மணிக்குள்ளும், இரவுநேரத் திருவிழாவை 6மணிக்குள்ளும் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி உற்சவ ஒழுங்குகளை ஆலயதர்மகர்த்தா சி. கணபதிப்பிள்ளை கவனித்து வருகிறார்.

பலாலி

## "விமானநிலைய விஸ்தரிப்பால் மாணவர் கல்வி பாதிப்பு!"

[மாவிட்டபுரம்]

"பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் அங்கிருந்து வெளியேறிய மக்களின் பிள்ளைகள் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே அவர்கள் கல்வியைத்தொடர யாழ். அரசாங்க அதிபரும், கல்விப் பணிப்பாளரும் உதவ வேண்டும்."

இவ்வாறு வலி - வடக்குப் பிரஜைகள் இணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடந்த மேற்படி கூட்டத்தில் தலைமை வகித்த மயிலிட்டி ஊறணி பிரஜைகள் குழுத்தலைவர் திரு. ரி. தேவராஜன் பேசுகையில் கூறியதாவது;

"இன்று சிவில் நிர்வாகம் சீர்குலைந்து கச்சேரி வேலைகள், சம்பளம், ஓய்வூதியம் பெறுதல் ஆதியன பாதிக்கப்பட்டுள்ளன. இதையிட்டு அரசு கவலையில்லாது நடக்கிறது. படிப்படியாக நிலைமை மோசமாகிவருகிறது.

"இந்நிலையில் பிரஜைகள் குழுவிலுள்ளவர்கள் தொண்டு மனப்பான்மையுடன் செயல்படவேண்டும். இவர்கள் கையில் பாரிய பொறுப்பு உள்ளது. மக்களை இணைத்து அவர்களுக்கு என்னவிதமான உதவிகள் தேவையோ அதை செய்ய முன்வர வேண்டும். அனைத்து விடயங்களையும் கவனிக்கும் நிலைக்கு பிரஜைகள் குழுக்கள் தயாராக வேண்டும். இன்றுபுதிய புதிய அமைப்புக்கள் தோன்றுகின்றன. யார் செயல்பட்டாலும் அதனுல் பயன் ஏற்படவேண்டும்.

"வட-கிழக்கு மக்கள் படும் இன்னல்களை துடைக்கவும், பாதிப்பு, இறப்பு பற்றிய குறிப்புக்களைக்கொண்டு கச்சேரி போல அகதிகள் புனர்வாழ்வு கழகம் இயங்குகிறது. இவர்கள் செய்யும் பணி பிற்கால சந்ததிக்கும் உதவும் அத்துடன் நஷ்டஈடுகள் கிடைக்கவும் வழிபிறக்கும் ஆகவே சகலரும்பாதிப்புக்கள் பற்றி மேற்படி கழகத்துக்கு தெரிவிக்க வேண்டும் சகலரும் என்னசெய்யவேண்டும் எப்படி செய்யவேண்டும்? என்ற நோக்குடன் ஒற்றுமையாக செயல்படவேண்டும்"

காங்கேசன்துறைப் பிரஜைகள் குழுத்தலைவர் அ. குமரகுரு பேசுகையில், "பிரஜைகள் குழுக்களுக்கு எந்தஅமைப்பு விதிகளும் தேவையில்லை. அமைப்புவிதி என்று வந்தால் தொடர்ந்துதேர்தல், போட்டி என்றுவரும் ஆகவே அமைப்பு விதிகள் இல்லாது மக்கள் சேவையென்று சகலரும் இணைந்து செயல்படவேண்டும்" என்ருர்


### கடைசிநேர வரிவிளம்பரம்

### கல்வி

க. பொ. த. [உயர்தர] 88 கலை/வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. Modern Education Center, Karaveddy. [C-1669]


### அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

திரு. ஐயாத்துரை கிருபாகரன்
[வேலணை ஆரம்ப நீதிமன்ற நீதிபதி]

அன்புடையீர்,

சென்ற 11-03-1986 அன்று அகாலமரணமான எனது அன்புக் கணவர் திரு. ஐயாத்துரை கிருபாகரன் [வேலணை ஆரம்ப நீதிமன்ற நீதிபதி] அவர்களின் அந்தியக் கிரியை எதிர்வரும் 10-04-1986 வியாழக்கிழமை காலை 6-30 மணிக்கு மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை தீர்த்தக் கரையிலும், அன்று பகல் அன்னரின் இல்லத்தில் சபிண்டீகரணமும் நடைபெறும். அவ்வமயம் அன்னரின் ஆன்ம ஈடேற்ற கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

திருமதி நீலலோஜினி கிருபாகரன்.

வேலணை மேற்கு,
வேலணை-6. C 567


எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30,
ரஜனி - கமல்
இளமை ஊஞ்சலாடுகிறது

LIDO Jaffna
10-30, 2-30, 6-30
நாகேஷ்-மனோரமா-சோ
V. K. ராமசாமி
நடித்த
ஆலயம்

5வது வாரம்
வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)


### புத்தாண்டை---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவ முகாமுக்கு அருகாமையில் உள்ள கட்டிடத்தில் வைத்து அடகு நகைகள் மீளளிக்கப்படவுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின்இம்முடிவை நகைஅடகுவைத்தோர் சங்கம் உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ள பிராந்திய முகாமையாளர் ஏனைய வாடிக்கையாளர்களினதும் பொதுமக்களினதும் நலன்கருதி மறியல் போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டுள்ளனர்.

அடகு நகை மீளளிப்பது சம்பந்தமாக அரசாங்கம் எடுத்த இம்முடிவின் போது யாழ். அரசாங்கஅதிபர் திரு. மு. பஞ்சலிங்கமும் பிரசன்னமாக இருந்தார் என அறியப்படுகிறது. (வா)

## ஈரான் தாக்குதலில் வல்வை இளைஞர் பலி!

[வல்வெட்டித்துறை]

ஈரானிய துருப்புகளின் குண்டு வீச்சுக்கு அகப்பட்ட எண்ணெய்த்தாங்கிக் கப்பலில் மாலுமியாகக் கடமையாற்றிய வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைஞர் பலியானர்,

'ஜெடா'வைச் சேர்ந்த 'பெற்ருே ஸ்ரார்-16' என்ற எண்ணெய்த் தாங்கிக் கப்பல் தமாம் என்ற இடத்திலிருந்து பஹ்றெயினுக்கு எண்ணெய் ஏற்றிக்கொண்டு சென்ற சமயம் ஈரானிய போர் விமானங்களின் குண்டு வீச்சுக்கு இலக்காகியதில் அதில் மாலுமியாகக் கடமையாற்றிய வல்வை காட்டுவளவு என்னுமிடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் பாலச்சந்திரமூர்த்தி (வயது25 என்பவரே பலியானவராவார். இத்தகவலைக் கப்பல் கம்பனியார் இறந்தவரின் பெற்ருேருக்கு அறிவித்துள்ளனர்.

## ரூ. ஆறு லட்சம் பொருள்கள் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் பாங்ஷால் வீதியிலுள்ள கூ. மொ. வி. ஸ்தாபனக் களஞ்சியத்திலிருந்து சுமார் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் 4 லொறிகளில் இப்பொருள்கள் ஏற்றிச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கொள்ளை யாழ் ரயில் நிலையத்தில் அமைந்துள்ள கூ. மொ. வி. களஞ்சியத்தில் இடம்பெற்றதாக நேற்று வெளியானசெய்தி தவறு.

## பூட்டியிருந்த வீட்டில் திருட்டு

[யாழ்ப்பாணம்]

வீட்டைபூட்டி வைத்து விட்டு கொழும்பு சென்றவர் ஒருவாரம் கழித்து மீண்டும் வீடு வந்து பார்த்தபோது ரொக்கப்பணம் உட்பட 24 ஆயிரம் ரூபா பொருள்கள் திருடப்பட்டிருந்ததாம்.

உரும்பராயைச் சேர்ந்த எஸ். ஏ. பரஞ்சோதி என்பவருக்கே இக்கதி நேர்ந்தது. ஹொண்டா மோட்டார் சைக்கிள், ரைப்ரட்டர், 10ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் ஆகியனவே திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

### யாழ்ப்பாணம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"அண்டை அயல் கிராமங்களிலேயே தங்கமுடியாத சூழலில், கடலோரப்பகுதி மக்களைத் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை ஒரு பெரும் கொலை நடவடிக்கைக் கொத்ததாகும். கடந்த சில நாட்களில் வடக்கில் நடைபெற்ற ஆகாயத் தாக்குதல்கள் அரசின் திட்டத்தைப் புலப்படுத்துவனவாக உள்ளன" எனவும் திரு. அமிர்தலிங்கம் பத்திரிகையாளரிடம் கூறினர். [ஷ]

## தாதிகளுக்கு ஆதரவாக காலியில் மறியல்!
### 12 பேர் பொலிஸ் காவலில்

[காலி]

வேலைநிறுத்தம் செய்யும் தாதிமாருக்கு ஆதரவாக சுலோக அட்டைகளைத் தாங்கியபடி மறியல்செய்யமுயன்ற 12 பேரை காலி பொலிசார் நேற்று கைதுசெய்தனர்.

இவர்களில் ஒருவர் வைத்திய மாணவர், இன்னெருவர் பல்கலைக்கழக மாணவர். இவர்களிடமிருந்து சுமார் 860 துண்டுப்பிரசுரங்களையும் கைப்பற்றினர். இந்தப்பிரசுரங்களை அச்சடித்த அச்சக உரிமையாளரையும் பொலிசார் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். இந்தப் பிரசுரங்களை பௌத்த பிக்குமார் அச்சடித்திருப்பதாகப் பொலிசார் கருதுகின்றனர். [பி.எஸ்.பி.]

### ஓரணியில் திரளுமாறு கோரிக்கை!

(ஓட்டுசுட்டான்)

தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிராகப்போராட்டத்தை நடத்துகின்ற சகல விடுதலை இயக்கங்களையும் ஒன்றுசேர்ந்து ஓரணியில் திரண்டு எமது தேசத்தைக் காக்க ஈழதேசிய விடுதலை முன்னணி முன்வரவேண்டும் என்று இப்பகுதி விவசாய, தொழிலாளி, மாணவர் கூட்டாகத் துண்டுப் பிரசுரமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் இயக்கங்கள் ஒன்றுசேர்ந்து ஓரணியில் போராடும் பொழுது சகல தமிழ்பேசும்மக்களின் பங்களிப்புகள் தாராளமாகக் கிடைக்குமென்றும் இப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ராணுவமுகாம்---

[1ம பக்கத் தொடர்ச்சி]

நேற்றுக்காலை தொண்டமனுறு முகாமுக்கு அண்மையிலுள்ள ஒரு இந்துக்கோயிலிலிருந்தே தீவிரவாதிகள் தாக்குதலை மேற்கொண்டதாகவும், கோவில் சேதமடையும் என்பதற்காக இராணுவம் பதில் தாக்குதலைத் தவிர்த்துக் கொண்டதாகவும் தேசிய பாதுகாப்பமைச்சு அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. [ஷ]

### இலங்கைவங்கி---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஞல் நடாத்தப்பட்ட கூட்டத்தில் வருடப்பிறப்பையடுத்து ஒவ்வொரு வாரமும் ஒரு கிளை என்ற ரீதியில் பணம் செலுத்திய நகைகளை கையளிப்பது என் என்ற ஒரு புதிய திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

"இக் கூட்டத்தில் அரச அதிபரும் சமூகமளித்திருந்தார். மேற்படி புதிய திட்டம் பற்றிய விபரமும் உறுதிப்பாடும் எமக்கு பிராந்திய முகாமையாளரினுல் எழுத்துமூலம் தரப்பட்டுள்ளது. மேலும் இது சம்பந்தமாக அரச அதிபரும் தொலைபேசிமூலமும் தெரிவித்துள்ளார். இதனையடுத்து இலங்கைவங்கி முன்பாக மறியல் திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்ட போதிலும் மக்கள் வங்கிமுன்பான மறியல் புதியதிட்டம் அமுல் படுத்தும் வரைக்கும்தொடர்ந்து நடைபெறும். ஆயினும்அரச அதிபருடன் இன்று நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தையை அடுத்தும் அவர் எழுத்துமூலம் எமக்கு தெரிவிக்கும் உறுதியையடுத்தும் மக்கள் வங்கி மறியல் கைவிடுவது பற்றி இவ்வார இறுதிக்குள் தீர்மானம் எடுக்கப்படும்.

ஓய்வூதியம் பெறுவோருக்கான ஓர் ஒழுங்கு நடவடிக்கையை நாம் இன்று தெரிவிப்போம். மேற்படிதிட்டத்தின் பிரகாரம் நகைகள் பலாலியில் வைத்து விநியோகிக்கப்படும். இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக சில அதிகாரிகள் 15ம் திகதி கொழும்பு செல்ல இருக்கின்றனர். மேற்படி திட்டத்தைப்பற்றிய சகல விபரங்களும் எமது அடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்படும்." [மா]

### வங்கி ஊழியர் ஒரு மணி நேர வேலைநிறுத்தம்

(கொழும்பு)

வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ள தாதிமாரின் போராட்டத்துக்கு ஆதரவாக வங்கிகளின் ஊழியர்கள் அனைவரும் நேற்று ஒரு மணிநேர வேலைநிறுத்தம் ஒன்றை நடத்தினர்கள்.

கொழும்பிலுள்ள சகல வங்களினதும் ஊழியர்கள் ஒரு மணி நேரம் வேலைநிறுத்தம் செய்தனர். [பி எஸ். பி.]

### வேலணை முன்னுள் கி. ச. தலைவர் காலமானர்

[யாழ்ப்பாணம்]

இளைப்பாறிய மலேசியாப் பொறியியலாளரும் முன்னுள் வேலணை கிராமசபைத் தலைவருமான திரு. க சதாசிவம் யாழ். சப்பல்வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்றுக் காலமானர்.

பிரபல சமூகசேவையாளரான திரு. சதாசிவம் தமது பிராந்திய அபிவிருத்திக்குப் பெருமளவு பங்களிப்புச் செய்தவராவார். இறுதிக்கிரியைகள் நாளை நடைபெறும்.

### முல்லைத்தீவில் அடியார்கள் வெயிலில் நிறுத்தப்பட்டனர்

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு இராணுவம் நேற்றுமுன்தினம் முள்ளியவளைக்குச் செல்லும் பாதையில் 3-ம் கட்டைச் சந்தியில் வாகனங்களை மறித்துச் சோதனை நடத்தினர்கள். இவ்விடத்தில் ஒரு இளைஞர் கைதுசெய்யப்பட்டார்.

வற்றாப்பளை அம்பாள் ஆலயத்தின் பங்குனித்திங்கள் உற்சவம் ஆதலால் பெருந்தொகையான மக்கள் இச்சோதனையால் பெரும் வேதனைக்குள்ளானர்கள். சிலர் இரண்டு கைகளையும் உயர்த்தியபடி கடும் வெய்யிலில் நிறுத்திவைக்கப்பட்டனர்.

இது இவ்வாறிருக்க ஒட்டுசுட்டானில் ரோந்து சென்ற இராணுவத்தினர் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் படுகாயத்துடன் தப்பிச் சென்றுள்ளார் மற்றவர் ஆயுதப்படையினரால் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

### சிப்பாய் ஒருவர்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவரின் காலில் துப்பாக்கிச் சூடுபட்டு காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிகிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. காயமடைந்த சிப்பாய் செட்டிகுளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

### ஜே. ஆர்---

(1ம்-பக்கத் தொடர்ச்சி

சோவியத் யூனியனுக்கு செல்லவுள்ளார்

'சோவியத் நாடாளுமன்றத்தின் 'அழைப்பை ஏற்றே திரு. ஜெயவர்த்தன சோவியத்யூனியனுக்கு செல்லவுள்ளார். [து]


## விசேட விலை குறைப்பு

புதுவருடத்தை முன்னிட்டு எமது கலர் பப்ளீன் விலை மீற்றர் ரூபா 18/-லிருந்து 17/50 ஆகக் குறைக்கப்பட்டுள்ளதென்பதை எமது வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேம்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

[A-566]

# கோட்டைப் பக்கமிருந்து தீப்பந்தம் போன்ற வஸ்து வந்து விழுந்தது!

## மரண விசாரணையில் சாட்சியம்

[யாழ்ப்பாணம்)

''யாழ். சோட்டைப் பக்கத்திலிருந்து இரைச்சல் சத்தத்துடன் நெருப்புப்பந்தம் போன்ற வஸ்து ஒன்று வந்து குருநகர்ச் சந்தியில் விழுந்து வெடித்துச் சிதறியதால், இறந்தவர் காயமடைந்தார்''

குருநகரைச் சேர்ந்த எஸ். சகாயரூபனி (26 வயது) மரண விசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியத்தின்போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

காலை பத்து மணிக்குக் கோட்டைப்பக்கத்தில் பலத்த வெடிச்சத்தம் கேட்டதாகவும், பின் துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டதாகவும், இதனைத் தொடர்ந்து மேற்படி சம்பவம் நடந்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

வெடிச்சத்தம் கேட்டதும் புகை கிளம்பியதாகவும், அவ்விடத்தில் நின்றவர்கள் சிதறி ஓடியதாகவும், 'ஷெல்' வந்து விழுந்து வெடித்ததால், இறந்தவருக்கு தலை, கை, கால், இடுப்பில் காயங்கள் ஏற்பட்டதாகவும், பின் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானூர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே 'ஷெல்' தாக்குதல் சம்பவத்தின்போது மரணமான குருநகரைச் சேர்ந்த எம். சிலுவைதாசனின் (28 வயது) மரணவிசாரணையின்போது அவர்மனைவி சாட்சியமளிக்கையில்கூறியதாவது:

''காலையில் களுவன்தீவுக்கு வள்ளம் எடுத்துவரப் புறப்பட்டவர், நண்பகல் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடந்தார்.'' காலையில் கணவன் புறப்பட்டு அரைமணி நேரத்தின்பின் கோட்டைப் பக்கத்தில் பலத்த வெடிச்சத்தங்களும், துப்பாக்கி வெடிச்சத்தங்களும் கேட்டதாகவும், ஹோட்டல் ஒன்றுக்குச் சமீபத்தில் ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடப்பதாக அறிந்து அவரைப் பார்த்து வரும்படி தமது சகோதரனை அனுப்பியதாகவும், அவர் வந்து தமது கணவன் இறந்துவிட்டதாகவும், சடலம் யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவித்ததாக மனைவி மேலும் கூறினூர்.

இச்சம்பவங்கள் பற்றி விசாரணை நடாத்திய யாழ் மரண விசாரணை அதிகாரி க. கேசவன் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டதைத் தொடர்ந்து மேலும் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க)

# இன்றைய பலன்

மாதம்- பங்குனி
திகதி- 27- [1986-4-9]
கிழமை- புதன்
திதி- அமாவாசை பி. ப. வரை
நக்ஷத்திரம்- ரேவதி மு. இ. வரை

மேடம்; நேர்முகப் பரீட்சைக்கு உகந்ததினம், தெய்வத்தின் அருள் தாராளமாகக் கிடைக்கும், பொன்னூன தினம்.

இடபம்: மனக்கவலைகளுக்கு இடமளிக்கும், கடமையில் தடையேற்படும், மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளுவீர்கள், பேச்சில் கவனம் வேண்டும்.

மிதுனம்: மாதுவழிப் பெருமைக்கு இடமுண்டு, மனம் போல்யாவும்நடக்கும், இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் உண்டு.

கடகம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனசனக் கொண்டாட்டங்களும், புத்திரர்சுகமும், தொழில் துறையில் வெற்றியும் கிடைக்கும்.

சிங்கம்: அவசரக்கோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும் மனதில் விரக்தி தோன்றும், வீணூன சிந்தனைகளினூல் சோர்வு தென்படும்.

கன்னி: இல்லத்தில் இனிமை தவழும். வெளியிடத்து தொடர்புகள் பெருகும், இனபந்துக்களால் உதவியுமுண்டு.

துலாம்; நண்பர்களுடன் கருத்து மோதல்கள் ஏற்படும், வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம், பொருட்செலவுமுண்டு

விருச்சிகம்: அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும். அறவழியில் ஆர்வம்பிறக்கும். ஆசசுப்பணியில் கவனம் செலுத்தவும்

தனுசு: தொழில்துறையில் சில மாற்றங்களுக்கு இடமுண்டு, பதவியிலும் உயர்வு உண்டு. பேட்டி காண்பதற்கு ஏற்றதினம்.

மகரம்: இன்றுஅதிகம் ஆதாயம் கிடைக்கும், புதுத் தொழில் முறைகளை மனம் நாடும், நீண்டபிரயாணத்திற்கும் இடமேற்படலாம்.

கும்பம்; பகைவர்கள் பதுங்குவர், பாதையில் பழுதுண்டு, நம்பிக்கை மோசடிமூலம் பணமும் பறிபோகலாம்.

மீனம்: நீண்ட நாள் கடன் இன்று நிவர்த்தியாகலாம் பிணியகலும், உங்கள் உதவிக்குப் புத்திரர் விரைவர்.

திருமலை
வே. ரவீந்திரன்


# பிரயாண ஒழுங்குகள்

## கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர்
21-ம் திகதி உங்களை அழைத்துச்செல்வார்.
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

மத்திய கிழக்கு நாடுகளில்

ஆண், பெண் இரு பாலாருக்கும்
வருமானத்திற்கேற்ற ஒழுங்குகள் உடனடியாக செய்துதரப்படும்.

பாஸ்போட், BOND, ரிக்கற்
முதலியனவும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

# GROUP ATLANTIC

HOSPITAL ROAD, JAFFNA.

(அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக)

(A 420)



# VACANCY

**MECHANICAL ENGINEER**

We are looking for a dynamic young Mechanical Engineer with BSc or equivalent qualifications and having minimum of 5 years practical experience in executive capacity.

The job will involve undertaking the mechanical design and fabrication of custom built plant and machinery for industrialists and entrepreneurs. Specific aspects include the cost estimation of projects and ensuring the quality of plant and machinery manufactured are of approved standard.

He will be responsible for organising and controlling projects and to formulate new strategy to promote sales.

We are able to offer successful applicant an attractive salary plus other fringe benefits.

**MARKETING EXECUTIVE**

We are looking for a Marketing Executive who will promote sale of the company by identifying prospective customers for our products.

He should have at least 5 years executive experience in private sector in the similar capacity.

The selected candidate will be rewarded with a negotiable package.

Apply To:
Managing Director,
**Promoters Engineering Company Ltd.,**
844, Point Pedro Road, Nallur, JAFFNA.

[A-560]


# "தூய்மையான சேவையால் உயர்ந்தஇடத்தைப்பெறலாம்"

(மண்டைதீவு)

''ஒருவன் பணத்தினூலோ, பதவியினூலோ அல்லது அந்தஸ்தினூலோ சமூகத்தில் உயர்ந்தவனுக வரமுடியாது. தூய்மையான சமூகசேவையினூல் தான் சமூகத்தில்உயர்ந்த இடத்தைப் பெறமுடியும். இதற்கு உதாரணமாக விளங்கியவர்அமரர் இ கந்தையா.''

இவ்வாறு மண்டைதீவு சமாதானசபை உறுப்பினரும் சமாதான நீதவானுமான அமரர் கந்தையாவின் இறுதிக்கிரியைகளைத் தொடர்ந்து நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மண்டைதீவு மகாவித்தியாலய அதிபர் சு. சண்முகநாதன் கூறினூர்.

மண்டைதீவு முன்னூள் கிராமோதய சபை தலைவர் என். இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த இரங்கல் நிகழ்ச்சியை மண்டைதீவு முன்னூள் கிராமசபைத் தலைவர் கு. க. நடராசா ஆரம்பித்து வைத்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்; ''இக் கிராமத்தில் நடைபெறும் எந்த ஒரு பொதுவைபவத்திலும் முன்நின்று உழைக்கும் சமூக சேவையாளன் இவர் எம்மத்தியில் இன்று இவர் இல்லாவிட்டாலும் இவரது இனிய சேவைகள் என்றும் எம் இதயத்தை விட்டு மறைந்துவிடாது' என்ருர்.

மண்டைதீவு கிராமசேவை அலுவலகர் என். சுந்தரராஜன பேசுகையில்; ''இவர் தனது இறுதிக் காலம்வரை மக்களுக்காக அயராது சேவை செய்தவர் என்பதை இன்றைய மக்கள்திரள் எமக்கு எடுத்துக்காட்டி நிற்கிறது'' என்ருர்.

மண்டைதீவுமுன்னூள்கிராம சபை தலைவர் கு க. நடராஜன் பேசுகையில்; ''சுயநல மற்ற சமூக சேவையாளனை நாம் இழந்துவிட்டோம். இவரது பிரிவு எமது கிராமத்துக்கு ஒரு பேரிழப்பாகும்'' என்ருர்.

மற்றும் மண்டைதீவு பிரஜைகள்குழு செயலாளர் என். இராமச்சந்திரன், வள்ளுவன் சனசமூக நிலைய தலைவர் க. இராசநாயகம், மதிஒளி ச. சமூகநிலைய தலைவர் எஸ். தில்லைநாதன், புனித பேதுருவானர் இளைஞர் மன்ற பிரதிநிதி அருள்தாஸ். உட்பட பலர் உரையாற்றினூர்கள்.

# அந்தக் கருகிய சடலம்: விபத்து

## மரணம் எனத் தீர்ப்பு

[வவனியா]

வைனியா-கண்டி வீதியில் உள்ள டயர்க் கடைக்குள் எரிந்து கருகியநிலையில் கண்டெடுக்கப்பட்ட சடலம் அக்கடையில் வேலைசெய்யும் கந்தசாமியுடையது என அடையாளம் காணப்பட்டதனை அடுத்து அவரது மரணம் பற்றிய மரணவிசாரணையைபட்டதில் நீதிவான் திரு ஆர் வி. வில்வராஜா நடத்தினூர்

விசாரணையின்போது இறந்தவரின் மனைவி மேரிபசியோனு (39-வயது) சாட்சியமளிக்கையில் :-

''எனது கணவர் தினமும் 'டயர்' கடைக்கு வேலைக்குப்போய் பின்னேரம் வீட்டுக்கு வருவார், 25-ம் திகதி வேலைக்குப்போனவர் 26-ம் திகதியும் வரவில்லை. 27ம்திகதி காலை வவனியா நகருக்கு நான் வந்தபோது, அவர் வேலை செய்யும் கடைக்குள் எரிந்து கருகிய நிலையில் சடலம் ஒன்று கிடப்பதாக அறிந்தேன். கருகிய அச்சடலம் எனது கணவருடையது தான்'' என்று தனது சாட்கியத்தில் கூறினூர். விசாரணையின் இறுதியில் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# புதுவருட விளையாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

புதுவருடத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகமும், பொதுமக்களும் இணைந்து நடாத்தும் விளையாட்டு விழா இன்று புதன்கிழமை [9-4-86] காலை வட்டு. விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகிறது

இப்போட்டியில் துடுப்பெடுத்தாட்டம், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், எல்லே, கிளித்தட்டு ஆகிய விளையாட்டுப்போட்டிகள் இடம்பெறும் ஒவ்வொரு பிரிவிலும் ஏழுபேர்கள் கொண்ட குழுவினர் இடம்பெறுவர் வெற்றிபெற்ற கழகத்துக்குப் புதுவருடப்பிறப்பிலன்று வெற்றிக் கேடயங்கள் வழங்கப்படுமென, விளையாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. நலோகசபேசன் தெரிவித்துள்ளார்.

# ஊக்குவிக்க நடவடிக்கை

[சாவகச்சேரி]

கோயிலாக்கண்டி, கச்சாய் பகுதியிலிருக்கின்ற கடலில் இருல் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு முன்னேடித் திட்டத்தினை நடைமுறைப் படுத்த யாழ். திட்டமிடல் பகுதி ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இத்திட்டம் தொடர்காக இவ் இரு பகுதிகளிலும் இருக்கின்ற நீர் மண்வள பருச்சாதனையை நிபுணர்கள் அண்மையில் மேற்கொண்டனர்எனத் தெரியவருகின்றது.

# முன்னூள் வித்தியாசாலை அதிபர் மறைவு

[வவனியா]

வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலை முன்னூள் அதிபர் திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை [வயது 62] கடந்த வெள்ளிக்கிழமை காலமானூர்

மன்னூர் வீதி வேப்பங்குளம் இந்து மயானத்தில் சனிக்கிழமை இவரது இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன

பெருந்தொகையான மக்கள் இவரது இறுதிக்கிரியையில் கலந்து கொண்டனர்.

# பரீட்சையில் சித்தி

(வவனியா)

வவனியா உதவி திட்டப் பணிப்பாளர் திரு. ஆறுமுகம் செந்தில்வடிவேல் முதுகலைமாணி பட்டப்பரீட்சையில் சித்திபெற்றுள்ளார்.

இவர் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.


# விக்னு டியூசன் சென்ரர்

## ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## O/L பிரிவு 4

DAY CLASS 8-30
EVENING CLASS 2-30

## ஆரம்பம் 18-4-1986

தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

கணிதம்: திரு. தயாபரன்
விஞ்ஞானம்: திரு. ரவீந்திரன்
தமிழ், சமயம்: திரு. திருப்பதி
ஆங்கிலம்: திரு. விஸ்வனுதன்
வர்த்தகம், சமூகக்கல்வி: திரு. கருணு
விவசாயம்: திரு. சொர்ணலிங்கம்

★ கடந்த 9 வருட காலமாக மாணவர்கள் தரமறிந்து கல்வியூட்டப்படுகின்றது.
★ விசேட சித்தி நிட்சயம்.
கடந்த கால பரீட்சைமுடிவுகள் இதற்கு சான்ருகும்.
★ 9ம், 8ம், 7ம், 6ம், 5ம். வகுப்புக்கள் ஆரம்பமாகும்.

விடுதி வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

A 426

## ஆசிரியர் திடீர் இடமாற்றத்திற்கு ஆட்சேபம்

[யாழ்ப்பாணம்]

கணிதம் கற்பிக்கின்ற ஆசிரியரொருவர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதால் சக ஆசிரியர்கள் வகுப்புச்குச் செல்லாது பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனுல் முதலாம் தவணைப்பரீட்சை ஸ்தம்பிதமடைந்தது.

இச்சம்பவம் கிளிநொச்சி கனகபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம் பெற்றது.

கணித ஆசிரியரை மீண்டும் இதே பாடசாலையில் கற்பிக்க அனுமதிக்க வேண்டுமெனக் கோரிப் பாடசாலை ஆசிரியர்கள் பகிஷ்காரட்போராட்டத்தில் ஈடுபட்டதைத்

## பிரியாவிடை அளித்தனர்

[வட்டுக்கோட்டை]

வட்டுக்கோட்டைதிருநாவுக்கரசு வித்தியாலயத்தின் தவணை முடிவுவிழா அண்மையில் இடம்பெற்றபோது கடந்த ஆண்டு ஓய்வுபெற்ற அதிபர் முருகவேல, திருமதி கனகசபை ஆச்சிப்பிள்ளை என்பவர்களுக்கு பிரியாவிடையளிக்கப்பட்டது.

தொடர்ந்து கிளிநொச்சி கொத்தணி அதிபர் இரா சின்னத்தம்பி இச்சம்பவத்தில் தலையிட்டு சமரசத் தீர்வினைக் கண்டார். இதன் பின்னரே ஆசிரியர்கள் பகிஷ்காரப் போராட்டத்தைக் கைவிட்டனர். (ஐ)


Wanted Immediately

Medical Officer

Applications are being called for Resident Medical Officer in the Unified Medical Service of the Jaffna Dioceso of the Church of South India. For further particulars contact:

The Acting Medical SUPERINTENDENT,
Green Momorial Hospital,
Manipay.

A 557



மலிவு விலையில்

தரமான திருமணப்பரிசு

DOUBLE ARM செற்றிசெற்
கடைசல் வேலைப்பாடுகளுடன் DOUBLE BED

United Engineers
Carpentry Workshop,

91, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(A 49)



சவூதி அரேபியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில்

பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியாவிற்கும் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் தொழிலாளர்களுககு (Labourers) உடன் பிரயாண வசதிகள் செய்துகொடுக்கப்படும். விரும்பினோர் பாஸ்ப்போர்ட், 6 படங்கள் என்பனவற்றுடன் இன்று நேரில் வரவும்.

முகவரி:

க. மு. வைத்தீஸ்வரன்,
கச்சாய் வீதி, கொடிகாமம்.

முக்கிய குறிப்பு:
(இன்று 9ந் திகதிக்குப் பின் மேற்படி வேலைகளுக்கான விபரங்கள் கவனிக்கப்படமாட்டா.) C 1639



NIRU TUITION CENTRE

STATION ROAD, KONDAVIL.

O/L Day Class

பகல் நேர வகுப்பு

யாழ். முன்னணி ஆசிரியர்களினுல் கற்பிக்கப்படுகின்றன.

(முற்றிலும் பாடசாலை வசதிகள் கொண்டவை.)

ஆரம்பம்: 10-04-1986.

வியாழன் காலை 8-00—1-30 மணிவரை.

A/L 88 August

கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்களுக்கான சகல பாடங்களும் ஆரம்பமாகின்றன.

யாழ்.பிரபல ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன.

ஆரம்பம்: 10-04-1986 காலை 8-00 மணி.

(A 428)


## சங்க ஊழியர் கூட்டம்

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர் கூட்டுறவு சிக்கன சேமிப்பு நாணயசங்கம் 1985ம் ஆண்டு 25 சங்க ஊழியர்களுக்கும் 1986ம் ஆண்டு 15 சங்க ஊழியர்களுக்கும் சாதாரண கடன்களை வழங்கியுள்ளது மேலும் 8 சங்கஊழியர்களுக்கும் தலா 5000 ரூபா விசேட கடன் வழங்கத் தீர்மானித்துள்ளது.

இந்த நாணய சங்க வருடாந்தப்பொதுக்கூட்டம் சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு சோ. அருணகிரி தலைமையில் நடைபெற்றது. திரு அருணகிரி தலைமைஉரையில் ''பணியாளர்கூட்டுறவு சிக்கன சேமிப்பு நாணய சங்கம் சங்கப் பணியாளர்களின் வாழ்க்கையை வழம்படுத்தலைக் குறிக்கோளாகக் கொண்டே இயங்கி வருகின்றது, இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்களும் சிறப்பாகச் செயற்பட்டு சங்க ஊழியர்ளுக்கு பல்வேறு வகைகளில் உதவிவருகின்றது. இச்சங்கத்தின் சிறந்த செயற்பாட்டிற்கு சகல சங்க ஊழியர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் இச்சங்கத்தின்மூலம் சங்கப்பணியாளர்களுக்கு 1000ரூபா சாதாரண கடன்களும் 5000 ரூபாவிசேட கடன்களும் 750 ரூபா வீடமைப்புக் கடன்களும் வழங்க உதவ முடியும் என்ருர்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

மரணசாதனமின்றி மரணித்த திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த வீரசிங்கம் ஜெயராஜசிங்கத்தின் மரணச்சொத்துச் சம்பந்தப்பட்ட விடயத்தில்

- மரணித்தவர்.

வீரசிங்கம் ஜெயராஜசிங்கம் கைம்பெண் கிருஷ்ணும், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்

- மனுதார்.

இல: தத்துவம்/3900

எதிராக

1. ஜெயராஜசிங்கம் மகள் மகுதா,
2. ஜெயராஜசிங்கம் மகள் அமுதா,
3. ஜெயராஜசிங்கம் அரவிந்தன் எல்லோரும் பராயமற்றவர்கள். இவர்களின் பாதுகாவலர்,
4. முருகேசுசின்னத்துரை சண்முகராசா, எல்லோரும் திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

- எதிர்வாதிகள்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணித்தவரின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேலே சொல்லப்பட்ட இலக்கத்தையுடைய தத்துவ வழக்கை இந்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும், அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இதில் அக்கறையுடைய எவரேனும் குறித்த பின்னுறுதிக் கட்டளையை ஏன் பூரணப்படுத்தப்படலாகாது என்பதற்கு தகுந்த காரணம் இருப்பின் இந்நீதிமன்றில் 1986ம் ஆண்டு சித்திரை மாதம் 25ந் திகதி காலை 9-00 மணிக்கு தோன்றி காண்பிக்குமாறு இத்கால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1986ம் ஆண்டு பங்குனி மாதம் 20ம்திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
பதிவாளர்.
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

வரைவு:
அ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி
C 1551

## வருடப்பிறப்பன்று மருதடி தேர்

உடுவில்.

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் தற்பொழுது நடைபெறுகின்றது.

புதுவருடப்பிறப்பு தினத்திலன்று தேர்த் திருவிழா நடைபெறும். மறுநாள் நடைபெறும் தீர்த்தத் திருவிழாவுடன் உற்சவம் முடிவடையும்

சென்ற ஆண்டுகளைப்போல இவ்வருடமும் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் முதலுதவிப் படையின் வீதி ஒழுங்குகள் போக்கு வரத்து வசதிகள் முதலுதவி ஆகியவற்றை கவனிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாண்டு பகல் திருவிழா காலை 10 மணி முதல் பகல் 1 மணிவரையிலும் இரவுத் திருவிழா மாலை 4 மணியிலிருந்து 6 மணிக்குள்ளும் நடைபெறுமெனத் தெரிய வருகின்றது.

திருவிழாக் காலங்களில் தற்காலிகமாக மேற்கொள்ளப்படும் வியாபார முயற்சிகளுக்கு கோவிலுக்கண்மையில் புதிதாக வாங்கப்பட்டுள்ள காணியில் இடம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

## தமிழக...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

பிட்டுள்ளார். அ. தி. மு க. விலிருந்தோ அல்லது சட்டசபை உறுப்பினர் பதவியிலிருந்தோ ராஜினுமாச் செய்வதாகச் குறிபபிடவில்லை.

முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரன் சில நாட்களுக்கு முன்னர் சுமார் 11 அமைச்சரவை உறுப்பினர்கள் விரைவில் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள் என்று அறிவித்திருந்தது தெரிந்ததே. [கி]

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
வள்ளிப்பிள்ளை சுப்பிரமணியம்

தோற்றம்: 12-05-1915

மறைவு: 21-03-1985

எங்கள் குடும்பத்தின் அணையா விளக்காக இருந்துஒளிவீசி எம்மை எல்லாம் அன்புடன் அரவணைத்து வரும் வேளையில் திடீரென எம்மைவிட்டுப் பிரிந்து இறைபதம் அடைந்து ஒரு வருடம் பூர்த்தியாகும் இந் நாளில் தங்களின் அன்பை நினைவு கூருகிறோம். தாங்கள்எம்மை விட்டுப் பிரிந்தாலும் தங்கள் நினைவு எம்மை விட்டுப் பிரியாது என்றும் நிலைத்திருக்கும். தங்கள் ஆத்மா சாந்தி அடைவதாக!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கொல்லங்கலட்டி.
C 1657)

## பொருள்காட்சி

[புங்குடுதீவு]

ஊரைதீவு தமிழ்மாதர் கழகத்தினர் நடத்தும் தையற் பயிற்சிநிலைய பொருள்காட்சி இம்மாதம் 19ம் திகதி காலை நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழர் கலாசாரச் சங்கத் தலைவர் சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளும் இப்பொருள்காட்சிக்கு கழகத் தலைவி திருமதி சந்திரா கோபால் தலைமை தாங்குவார்.

திரு. என். தனபாலச்சந்திரன், திரு. இ. சுந்தரராசா ஆகியோர் மங்கலவிளக்கேற்ற பலர் உரையாற்றவுள்ளனர். இப்பொருட்காட்சிக்குரிய ஏற்பாடுகளை மாதர் கழகச் செயலாளர் செல்வி து இராசகுலேஸ்வரி செய்துவருகிருர்.

## சமாதான சபை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு மத்திய கிராமமுன்னேற்றச் சங்க மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு சமாதானசபை ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

சபையின் புதிய நிர்வாகிகள் வருமாறு: தலைவர்; ச.இலட்சுமணன், உபதலைவர்: ச. குலசிங்கம், செயலாளர்: இ. யோகராஜா, பொருளாளர்: க. நாகலிங்கம், இவர்களுடன் மா. குணசிங்கம், அ சோமசுந்தரம், இ. தர்மகுலசிங்கம் ஆகிய மூவரைக்கொண்ட நிர்வாகக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## கடும் சோதனை

(வவனியா)

வவனியா கச்சேரிக்கு முன்பாகவுள்ள இராணுவத் தடைமுகாம் ஊடாகச் செல்லும் சகல வாகனங்களுடைய இலக்கங்களும் அங்கு பதியப்படுகின்றன,

இந்தத் தடைமுகாமில் இராணுவ பொலிஸ்கூட்டு சோதனை இடம்பெற்றுவருகின்றது.

குறிப்பாக வடபகுதியிலிருந்து கொழும்பு செல்லும் இளைஞர்கள் தீவிர சோதனைக்குள்ளாவதினைத் தவிர்க்கும் பொருட்டுத் தம்முடன்தேவையான தம்மை அத்தாட்சிப் படுத்தக்கூடிய போதுமானளவு தஸ்தாவேஜுகளைக் கொண்டு செல்வது பயன் தரத்தக்கது என்றும் ஆலோசனை கூறப்படுகின்றது.

## பஞ்சாப்...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீவிரவாதிகள் கைதானபோது இவர்களின் மறைவிடங்களிலிருந்து பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிபொருட்களும் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை அமிர்தஸாஸ் பொற்கோயில், மீண்டும் தீவிரவாதிகள் கையில் இருப்பது குறித்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி கவலை வெளியிட்டுள்ளார்.

ஆயினும் பஞ்சாப் முதலமைச்சர் திரு. சுர்ஜித்சிங் பர்ஞலா பஞ்சாபிலுள்ள தீவிரவாதிகளைக் கையாளும் பொறுப்பை தம்மிடமே விட்டு விடும்படியும், இதில் மத்திய அரசைத் தலையிடவேண்டாமென்றும் குறிப்பிட்டார். (கி)

## மகாஞான

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குருஞானதேவர் என்பதைக் காட்டுகின்ருர் போலும்!

தத்துவநிலை உலகம் தத்துவாதீதநிலை ஞானம். தத்துவாதீதநிலை பெறருேர் குரவர். அந்த வகையில் வந்த நம் அருஞ்செல்வரே செல்லப்பர். இவர் 1915 பங்குனி,வெள்ளி, அச்சுவினி நட்சத்திரத்தில் மகாசமாதியடைந்தார்.

— பருளாய் விநாயகன்

# இலங்கையில் இஸ்ரேல் - பாகிஸ்தான் இயக்கம்: லோக்சபாவில் ராஜீவ் பேச்சு

[புதுடில்லி]

''பாகிஸ்தானும் இஸ்ரேலும் தோளோடு தோள் சேர்ந்து இலங்கையில் செயல்படுகின்றன. இது ஒரு சாமான்ய சங்கதியில்லை''.

நேற்று இந்திய லோக் சபாவில் பேசும்போது இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் காணப்படும் பல்வேறு நவீன பாதுகாப்பு வசதிகள் குறித்து இந்தியா பெரும் கவலைகொண்டுள்ளதாகவும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மேலும் தெரிவித்தார். [து]

## வவுனியாவில் பிரயாணிகள் சிரமம்

[வவுனியா]

வவுனியா சச்சேரி தடை முகாமில் நேற்று சகலவாகனங்களும் தடுத்து நிறுத்தப்பட்டுக் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இச்சோதனையால் பிரயாணிகள் பெரும் சிரமத்துக்குள்ளானார்கள். [மா]

## கோவில் கும்பிட்ட அடியார்மீது சூடு!

[ஒட்டுசுட்டானிலிருந்து நமது நிருபர்]

ஒட்டுசுட்டான் சிவன்கோவிலில் வழிபட்டுக்கொண்டிருந்த பக்தர் கூட்டத்தைநோக்கி திடீரெனச் சென்ற ஆயுதப் படையினர் துப்பாக்கிவேட்டுகளைத் தீர்த்தனர் இதனால் ஒருவர் படுகாயமடைந்தார். மற்றவர்கள் சிறு காயங்களுடன் ஒடித்தப்பித்துக்கொண்டனர்.

ஆலயத்துக்கருகாமையில் உள்ள ரயர் கடையில் வேலை செய்துகொண்டிருந்த இளைஞர் இராசையா ஜெகன் [20 வயது] என்பவர் கைதுசெய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் இராணுவ முகாமிலிருந்து ஜீப் வண்டியில் சென்ற ஆயுதப்படையினரே இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவமுகாமிலிருந்து அரை மைல் தூரத்தில் சிவன் கோவில் உள்ளது.

ஆயுதப்படையினரின் துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒட்டுசுட்டானைச் சேர்ந்த எஸ். கோபாலன் [22 வயது] என்பவர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆயுதப்படையினரின் இந்த நடவடிக்கையின்போது ஹெலிகொப்டரும் தாழப்பறந்து உதவிபுரிந்தது. (மா)

## யாழ். ஆயுர்வேதமாணவிகள் இன்று அரச அதிபரைச் சந்தித்தனர்

[யாழ்ப்பாணம்]

யாழ். லங்கா ஆயுர்வேதக் கல்லூரி முன்னால் மறியல் செய்துவரும் மாணவிகள் சார்பில், மாணவிகள் குழு ஒன்று இன்று காலை யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தைச் சந்திக்கவிருக்கிறது.

கல்லூரி முன்னால் நேற்றும் சுலோக அட்டைகளுடன் மாணவிகளும் பெற்றோரும் மறியல் போராட்டம் நடத்தினார்கள்.

பிரச்னை தீரும்வரை மறியல் போராட்டம் தொடருமென மாணவிகள் தெரிவித்தனர்.

இதுபற்றி கல்லூரி நிர்வாகத்தினர் இன்று கூடி ஆலோசிக்கவிருப்பதாகத் தெரிகிறது. [க]

## "இரவு 8 மணிக்குப்பிறகு நடமாடக்கூடாது"

### நயினை மக்களுக்கு இப்படி ஒரு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

''இரவு எட்டு மணிக்குப் பின்பு வீட்டைவிட்டு எவரும் வெளியே நடமாடக்கூடாது அப்படி யாராவது வெளியே வந்தால் சந்தேகத்தின்பேரில் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு உட்படுடுவீர்கள்.''

இவ்வாறு பாதுகாப்பு அதிகாரி ஒருவர் நயினாதீவு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளாராம்,

நேற்று நயினாதீவுத் துறைமுகத்தில் நின்ற மக்களைப் பாதுகாப்புப் படையினர் சோதனையிட்ட சமயமே பாதுகாப்பு அதிகாரி ஒருவர் இவ்வாறு எச்சரித்தார் எனத் தெரியவருகிறத.

இப்புதிய அறிவிப்பினால் நயினாதீவு மக்கள் அச்சம் அடைந்துள்ளனராம். (ஓ)

## ஹெலிகொப்டரிலிருந்து சாவகச்சேரிப்பகுதியில் பரவலாகச்சூடு

[யாழ்ப்பாணம்]

ஹெலிகொப்டர் சுட்டதால் மினிவானின் நடத்துநர்பயந்து மினிவானின் கீழ் படுத்திருந்தது தெரியாமல் சாரதி மினிவானை ஓட்டினார். இதனால் நடத்துநர்மீது மினிவான் ஏறியது. இதனால் காயமடைந்த மினிவான் நடத்துநர் யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி தனங்கிளப்புப் பகுதியில் நடந்தது. மினிவான் ஏறியதால் காயமடைந்தவர் கிருஷ்ணபிள்ளை பாஸ்கரன் [22 வயது] ஆவார்.

இந்தமினிவான் சாவகச்சேரி ஊடாக கேரதீவுசெல்லவிருந்தபோதே ஹெலிகொப்டர் இதன்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. உடனடியாக மினிவானைச் சாரதி நிறுத்திவிட்டார். எவருக்கும் காயமேற்படவில்லை. ஆயினும் மினிவான் நடத்துநர் ஹெலிகொப்டர் சூடு பட்டுவிடக்கூடாது என்ற பயத்தால்மினிவானின் கீழ் படுத்துக்கொண்டாராம். [ஐ-கிளி. நி.]

### கைதடியில்

கைதடியில் நேற்று முன்தினம் மாலை வீதியால் சென்ற லொறிமீது ஹெலிகொப்டர் தாக்குதல் நடைபெற்றது.

ஹெலிகொப்டரிலிருந்து சுடப்பட்டதும் லொறி ஒரு மதகில் மோதிய தாகவும், லொறிச்சாரதி, கிளினர் மற்றும் பயணிகள் மதகுக்குள் பதுங்கித்தப்பினார்கள் என்றும் கூறப்படுகிறது.

### மறவன்புலவில்

மறவன்புலவிலும் ஹெலிகொப்டர் தாக்குதல் இடம் பெற்றது. பயறு அறுவடை செய்து கொண்டிருந்த பெண்கள் மீது இத்தாக்குதல்நடைபெற்றது. சில பெண்கள் காயமுற்றனர். பலர் ஓடித் தப்பினர். (மா)

## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ R. S. மணிஐயர்

R. S. மணிஐயர் காலமாகிவிட்டார். இவர் முன்னாள் ஈச்சமோட்டை கலட்டிபுல ஞான வைரவ கோவில் பூசகரும், தற்போதைய பாணன்குளம் நாச்சி அம்மாள் கோவில் பிரதம பூசகரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 9-4 86 [இன்று] புதன்கிழமை மாலை 3 மணியளவில் 105/3, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: A. V- சர்மா, நல்லூர். [C 1665]

### சாமிநாதர் லிகோறி

அளம்பில் உப தபால் அதிபர் சாமிநாதர் லிகோறி காலமாகிவிட்டார் இவர் மார்கிறற்றின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சாமிநாதர் சின்னத்துரை, அன்னம்மா பாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும், ஜெயகுமார் (லண்டன்), அருட்திரு யோசப் சந்திரகுமார் லிகோறி (பாகிஸ்தான்), செல்வகுமார் (பிரான்ஸ்), உதயகுமார் (பிரான்ஸ்), வசந்தகுமாரி. ஜெயகுமார் (வணிக பீடம், யாழ். வளாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வயலட், மாலா, ராணி ஆகியோரின் மாமனாரும், நிதர்சன், பிரியதர்ஷினி, ஜசா ஆகியோரின் பேரனும், ஜேசுதாசன் (இளைப்பாறிய அலுவலர், விவசாயத் திணைக்களம், பேராதனை), செலஸ்ரீனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சவுந்தரி, காலஞ்சென்ற பஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் 10-4-86 வியாழக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு யாழ்ப்பாணம், கோவில் வீதி 41-ம் இலக்க இல்லத்திலிருந்து யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திறகாக எடுத்துசசெல்லப்படும்.

[C 1671]

### க. சதாசிவம்

வேலணை முன்னைநாள் கிராமசபைத் தலைவரும், இளைப்பாறிய மலேசியா பொறியியலாளருமான திரு. க. சதாசிவம் 8-4-86 செவ்வாய்க்கிழமை காலமானார். இவர் நகுலாம்பிகையின் அன்புக் கணவரும், திரு. நடனசிவா (Deputy Commissioner Inland Revenue Dept Ratnapura), Dr S. ஆனந்தசிவா (Hongkong), திருமதி சிவாம்பிகை பொன்னம்பலம் (ஆசிரியை வேம்படி மகளிர் கல்லூரி. யாழ்ப்பாணம்), Dr. (திருமதி) ஞானம்பிகை சிவபாதசுந்தரம் (Veterinary Surgeon) சாவகச்சேரி, திருமதி தவாம்பிகை நித்தியானந்தன் (U K.), திருமதி மீனும்பிகை வரதராஜன் (U. K.) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு பொன்னம்பலம் (கணக்காளர், வ. மா. கூ தொ. கூட்டுறவு சமாசம் யாழ்ப்பாணம்) திரு. சிவபாதசுந்தரம் தொழில்நுட்பவியலாளர் (Saudi), திரு நித்தியானந்தன் கணக்காளர் (U K ), திரு. வரதராஜன் (U K ), திருமதி வள்ளிநாயகி (Deputy Commissioner Inland Revenue Dept Negombo), Dr (திருமதி) வசந்தமல்லிகா (Hongkong) ஆகியோரின் அன்பு மாமனாரும், சசிகலா (Oxford University), ஹரிகரன், நிஷாகரன், கார்திகா, மதுரிகா, சுபத்ரா, சிவகுமாரன், செல்வி வரதராஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை (10-4-86) காலை 9-00 மணியளவில் அவரது யாழ்ப்பாணம், 41, தேவாலய வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம்.

[C 1672]

## நீர்வேலிக்கொள்ளை எதிரொலி: வீதித்தடைகள் மேலும் விஸ்தரிப்பு!

[யாழ்ப்பாணம்]

நீர்வேலியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தைக் கண்டித்து அப்பகுதியிலுள்ள வீதிகளில் போடப்பட்டிருந்த தடைகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதால் இப்பகுதியூடான சகல போக்குவரத்துச் சேவைகளும் தடைபட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவு நீர்வேலியில் உள்ள ஒரு வீடடில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தைக் கண்டித்து அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் வீதிப்போக்குவரத்து சேவை நடைபெறாமல் தடைகள் போடப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக இன்று பிற்பகல் 4 மணிக்கு நீர்வேலியில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி சகல அமைப்புகளுக்கும், பிரமுகர்களுக்கும் தனிப்பட்ட சிலருக்கும் அழைப்புக்கள் விடுக்கபடடுள்ளன. [மா]

## கிளிநொச்சியில்:

### 15 வயது மாணவன் கைது!

[கிளிநொச்சி]

கிளிநொச்சியில் உள்ள கராஜ் ஒன்றில் வைத்து சுமார் 15 வயது மதிக்கத்தக்க பாடசாலை மாணவர் ஒருவரை ஆயுதப்படையினர் கைது செய்து கொண்டு சென்றனர்.

யாழ்ப்பணத்திலுள்ள கல்லூரி ஒன்றில் கல்விபயிலும் இம்மாணவன் விடுமுறைக்கு வீடு திரும்பி தந்தையாருடைய கராஜ்ஜில் தங்கியிருந்தபோதே கைது செய்யப்பட்டார்.

பிச்சைமுத்து ரமேஷ் என்பவரே கைதானவராவார். அப்பாவியான இம் மாணவனை விடுவிககும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி அமைதிஇழந்தது

(கிளிநொச்சி)

நேற்றையதினம் கிளிநொச்சியில் பாரிய குண்டொன்று வெடித்ததைத் தொடர்ந்து நகரம் அலலோல கல்லோலப்பட்டது.

நண்பகல் நேரம் இராணுவ முகாம்பக்கமாக கேட்ட இ பயங்கரசத்தத்தால் கிளிநொச்சி அமைதி இழந்தது.

## கொள்ளையை எதிர்த்து பிரசுரம்

(வட்டுக்கோட்டை)

கலைநகர் சித்தன்கேணியில் உள்ள வீடொன்றில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளை இனந்தெரியாத நபர்களினால் நடாததபபெற்றது

பலலட்சம் பெறுமதியான பொருள்களும் பணமும் திருடப் போயின இக்கொள்ளையைக் கண்டித்துத் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

## மின்கம்ப தண்டனை

புலோலி]

இயக்கத்தின் பெயரால் கொள்ளைகளில் ஈடுபட்டதாக தம்பலகாமததைச் சேர்ந்த இளைஞருக்சப் பஸ் நிலையததில் மின்கம்பத் தண்டனை வழங்கப்பட்டது.

தீ பிரவாத இயக்க இளைஞர்களினால் இம்மின்கம்பத் தண்டனை வழங்கப்பட்டது. காலை 9 மணிக்கு பஸ்நிலைய மின்கம்பமொன்றுடன் கட்டப்பட்ட இவ்விளைஞர் பகல்வேளையில் காட்சிக்காக கட்டிவைக்கப்பட்ட பின் பி. ப. 3 மணிக்கு எச்சரித்து அவிழ்த்துவிடப்பட்டார்:

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126